வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 03 | 17.05.2022 செவ்வாய்க்கிழமை | இதழ் : 162 | பக்கங்கள் : 16




## கோட்டாவை எதிர்க்கிறோம் என்று முழு பொய் கூறி ரணிலுக்கு ஆதரவு

### தமிழ்க் கட்சிகள் இந்திய அடிவருடிகள் என்று சாடுகின்றார் கஜேந்திரகுமார் பொன்னம்பலம்



யாழ்ப்பாணம், மே. 17

முதுகெலும்பில்லாத இந்திய அரசின் அடிவருடிகளான சில தமிழ்க் கட்சிகள் விழுந்து விழுந்து ரணில் விக்கிரமசிங்கவை வரவேற்கின்றன. அவர்கள் மக்களுக்கு உண்மையைச் சொல்லாது கோட்டாபயவை எதிர்க்கின்றோம் எனப் பொய் கூறி மலசல கூடம் செல்வதற்குக்கூட கோட்டாபயவிடம் கேட்டுச் செல்லும்ரணிலுக்கு ஆதரவளிப்பது

15

## ரணிலை விட்டுப்பிடிப்போம் கோட்டாபயவை எதிர்ப்போம்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முடிவு

கொழும்பு, மே. 17

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பதென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடந்தபோது இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது. அத்துடன், பிரதிச் சபாநாயகர் தெரிவில், பாராளுமன்ற நிலைமையை பொறுத்து, பாராளுமன்றக்

15

## 10 கட்சிக் கூட்டணி ரணிலுக்கு ஆதரவு!

கொழும்பு, மே. 17

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுத்த அழைப்பை அடுத்து பொதுஜன பெரமுன அரசாங்கத்தில் இருந்து விலகிய 10 சுயாதீன அரசியல் கட்சி உறுப்பினர்களும் அவரது அரசுக்கு ஆதரவளிக்க தீர்மானித்துள்ளனர்.

உத்தேச அனைத்துக் கட்சித் தலைவர்களின் தேசிய சபை மற்றும் உத்தேச பாராளுமன்றக் குழுக்களில் இணைந்து அரசாங்கத்திற்கு ஆதரவளிப்பதற்கு 10 கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன்

15

## எரிவாயு விநியோகம் நாளைமுதல் ஆரம்பம்!

கொழும்பு, மே 17

இன்றும் நாளையும் நாட்டுக்கு அடுத்தடுத்து இரு எரிவாயு கப்பல்கள் வரவுள்ளன. இதனால், நாளை புதன்கிழமை முதல் எரிவாயு விநியோகம் ஆரம்பமாகும் என்று லிட்ரோ நிறுவனம் தெரிவித்துள்ளது.

3,700 மெற்றிக் தொன் எரிவாயுவை ஏற்றிய கப்பல் இன்று காலை நாட்டை

15

# ரணிலுடன் பேச்சு நடத்தி தீர்வை அடைய முயற்சி!

## கூட்டமைப்பின் தலைவர் நம்பிக்கை




கொழும்பு, மே 17

"தமிழ் மக்களின் பிரச்னைகளை நன்கு புரிந்து கொள்ளக்கூடியவர்தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. எனவே, அவருடன் பேச்சு நடத்தி, தமிழர் பிரச்னைகளுக்கு அரசியல் தீர்வை பெற்றுக் கொள்ள முயற்சி எடுக்கப்படும்." - என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

15

## சவால்களை வெற்றிகொள்வேன் சகலரும் ஒத்துழைப்பு தாருங்கள்!

### பிரதமர் ரணில் மக்களுக்கு அழைப்பு



- பெற்றோல் ஒருநாளுக்கே போதும்
- மின்வெட்டு 15 மணிநேரமாகலாம்
- டீசல், எரிவாயு பிரச்னைக்கு தீர்வு

கொழும்பு, மே 17

"உயிரை பணயம் வைத்து இந்த சவாலுக்கு நான் முகம் கொடுப்பேன். அந்த சவாலை வெற்றி கொள்வேன். அதற்கு உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பையும் எனக்கு தாருங்கள்." - இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையின்போது தெரிவித்தார்.

அவரின் உரையின் முக்கிய அம்சங்கள் மட்டும் வருமாறு,

கடந்த வியாழக்கிழமை நான் பிரதமர் பதவியை பொறுப்பேற்றேன். அந்தப் பதவியை நான்

15

## வன்முறைகளால் ஜோன்ஸ்ரனின் சொத்துகளுக்கே அதிகளவு அழிவு



கொழும்பு, மே 17

'கோட்டா கோ கம' போராட்ட களத்தில் நடத்தப்பட்ட தாக்குதலை தொடர்ந்து கடந்த 9 ஆம் திகதி நடை பெற்ற வன்செயல்களில் ஆளும் கட்சியின் பொதுஜன பெரமுனவினரே பாதிக்கப்பட்டனர்.

இதில், முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்ரன் பெர்னாண்டோவின் சொத்துக்களுக்கே அதிகளவு சேதம் ஏற்படுத்தப்பட்டன என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்தது.

ஜோன்ஸ்ரனுக்கு சொந்தமான 19 வீடுகள் மற்றும் வணிக வளாகங்கள் சேதமடைந்தன என்று பொலிஸ் தலைமையகத்துக்குக் கிடைத்த முறைப்பாட்டில்

15

## பொருளாதாரத்தை வலுப்படுத்த பிரதமர் ரணிலுக்கு முழு ஆதரவு!

### ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானம்

கொழும்பு, மே. 17

நாட்டின் நலன் கருதி அமைச்சுப் பதவிகளை ஏற்காமல் பாராளுமன்ற செயற்பாட்டின் ஊடாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வழங்குவது என்று ஐக் கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்றக் குழுக் கூட்டத்தில் ஏகமனதாக இந்த முடிவு எட்டப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

ஒரு பொறுப்பான அரசியல் கட்சி என்ற வகையில், தற்போதைய நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பது அவசியம் என்றும் அந்தக் கட்சி தெரிவித்தது.

(அ)

## ரணிலைப் பிரதமர் ஆக்கியதன் பின்னணியில் இந்தியா இல்லை

### சம்பந்தனிடம் கூறினார் கோபால் பாக்லே

கொழும்பு, மே. 17

"ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக்கியதன் பின்னணியில் இந்தியா உள்ளது எனப் பலரும் கூறுகின்றார்கள். நாங்கள் அவ்வாறு எதுவும் மேற்கொள்ளவில்லை."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனிடம் இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை அவர் நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடிய போதே இதனைக் குறிப்பிட்டார்.

"இலங்கையின் பொருளாதார நிலைமை மோசமாகவுள்ளது. ஓர் உறுதியான அரசு அமையப்பெற வேண்டும். அப்போதுதான் பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க முடியும். ஓர் உறுதியான அரசு அமையப் பெறவேண்டும் என்பதில் கரிசனை

15

## இப்படியும் நடக்கிறது...!

யாழ்ப்பாண முதல்வராக இருந்த சட்டத்தரணி ஆர். விஸ்வநாதனை தெரியாதவர்கள் அந்தக் காலத்தில் இருக்கமுடியாது.

பிரபல சட்டத்தரணியான அவர் எப்போதுமே சாமானியர்களுக்காக வழக்குப் பேசுவதிலேயே அக்கறை காட்டியவர்.

அவர் காலத்தில் யாழ்ப்பாணத்து நீதிமன்றங்களில் வழக்குகள் என்றால், சைக்கிளில் லைற் இல்லாமல் போனவர்கள், சைக்கிள்களில் உள்ள பாகங்களை திருடியவர்கள் என்று பொலிசாரால் தாக்கல்செய்யப்படும் வழக்குகள்தான் ஏராளமானவையாக இருக்கும்.

இப்போதெல்லாம், அப்படியான வழக்குகளையே காண முடியாது.

இப்படி, சைக்கிளில் லைற் இல்லாமல் சென்ற ஒருவரின் வழக்குக்கு குற்றவாளி தரப்பில் ஆஜராகியிருந்தார் விஸ்வநாதன்.

வழக்கு இலக்கம் சொல்லி குற்றவாளியை கூண்டில் ஏற்றியதும், அவர் சார்பில் ஆஜரான விஸ்வநாதன் குற்றவாளியைப் பார்த்து, 'ஏன்ரா, லைற் இல்லாமல் சைக்கிள் ஓடக்கூடாதெண்டு தெரியாதா' என்று கடிந்துவிட்டு, 'சரி சரி... ஒரு இருபது ரூபாயை கட்டிப்போட்டு போ...' என்று, தீர்ப்பையும் தானே சொல்லிவிடுவார்.

நீதவான் சிரித்துக்கொண்டே தீர்ப்பை எழுதிவிட்டு, பைலை மூடிவிடுவார்.

இந்தச் சம்பவம்தான் அந்தச் செய்தியைப் படித்தபோது ஞாபகத்தில் வந்தது.

அவரும் ஒரு பிரபல்யமான சட்டத்தரணிதான். ஆனால் விஸ்வநாதன்போல சைக்கிள் வழக்குகள் பேசுபவரல்ல. ஐந்து தசாப்தங்களுக்கு அண்ணளவாக தமிழர் அரசியலில் வலம்வருபவர். தனக்கு சரி என்பதை எந்த தயக்கமும் இன்றி சொல்பவர். அதானால்தான், தந்தை செல்வா தமிழர் பிரச்னைக்கு தமிழீழம்தான் தீர்வு என்று சொல்வதற்கு ஐந்து வருடங்களுக்கு முன்னரே தமிழ் ஈழம்தான் தீர்வு என்று சொன்ன காவலூர் வி. நவரத்தினத்தின் பின்னால் அணிதிரண்டு, அவரது இயக்கத்தின் தளபதிபோல செயற்பட்ட ந. சிறிகாந்தா.

இப்போது, தமிழ் தேசியக் கட்சியின் தலைவராக இருக்கும் அவர், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பாக நேற்று முன்தினம் அறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்தார்.

அந்த அறிக்கையில்,

'தமிழ் மக்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்பில் முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலி என்பது புதிய பிரதமருக்கு ஓர் அக்கினிப் பரீட்சையாகவே இருக்கும்.

'அதில் அவர் தேறுவதோ அல்லது தவறுவதோ தமிழ் மக்களின் அரசியல் சிந்தனைகளில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியே தீரும் என்பதையும் நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்' என்று, சிறிகாந்தா தனது அறிக்கையில் தெரிவித்திருக்கின்றார்.

"நாட்டில் நினைவேந்தல் நிகழ்வுகள் எவற்றுக்கும் தடையில்லை. போரில் இறந்தவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை நினைவேந்த உறவுகளுக்கு முழு உரிமை உண்டு. அதை எவரும் தடுக்க முடியாது" என்று, புதிய பிரதமராக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்த பின்னர், சிறிகாந்தா இந்த அறிக்கையை வெளியிட்டிருந்தார்.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நடாத்துவதற்கு அனுமதி வழக்கப்படவில்லை. படையினரின் பலத்த கெடுபிடிகளுக்கு மத்தியிலேயே கடந்த இரண்டு நினைவு தினங்களும் கடந்து போயிருந்தன. அதற்கு, கொரோனா நெருக்கடியும் அரசுக்கு உதவியது.

ஆனால், இம்முறை நிலைமை அப்படியல்ல. தனக்கு எதிரான போராட்டங்களையே எதிர்கொள்ள முடியாது நெருக்கடிகளைச் சந்தித்துக்கோண்டிருக்கும் ஜனாதிபதி, முள்ளிவாய்க்காலிலும் ஒரு நெருக்கடியை சந்திக்க விரும்பமாட்டார் என்றே எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்நிலையிலேயே, புதிய பிரதமரும் நினைவேந்தலுக்கு தடையில்லை என்று அறிவித்துவிட்டார். இந்தப் பின்னணியில், சிறிகாந்தா வெளியிட்டுள்ள அறிக்கையில் முள்ளிவாய்க்கால் நினைவஞ்சலியை தமிழ் மக்கள் அனுஷ்டிக்க அனுமதி வழங்கினாலும் சரி வழங்க முடியாவிட்டாலும் சரி, தமிழ் மக்களின் அரசியல் சிந்தனையில் அது பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியே தீரும் என்றிருக்கிறார்.

அதுதான், விஸ்வநாதன் குற்றவாளிக்கு குற்றத்தை ஒப்புக்கொள்ளச் சொல்லிவிட்டு, தண்டனையையும் தானே சொன்னதுபோல, சிறிகாந்தாவும் குற்றத்தையும் சொல்லி தீர்ப்பையும் தானே சொல்லியிருக்கிறார்.

அவர் சொல்ல வருவது, நீங்கள் அனுமதி வழங்கினால், தமிழர்களின் அரசியல் சிந்தனையில் ஒரு தாக்கமும், அனுமதி வழங்காவிட்டால் வேறுவிதமான தாக்கமும் ஏற்படும் என்றே அவர் எச்சரிக்கிறார் என்று நினைக்கிறேன்.

அனுமதி வழங்கினால், அவரது கூட்டணித் தலைவர் அமைச்சராவார் என்று அவர் சொல்வதாக எடுத்துக்கொள்ளலாம். ஏனெனில், அதுவும் தமிழ் அரசியலில் புதிய தாக்கம்தான். அனுமதி வழங்காவிட்டால் தாக்கம் எப்படியிருக்கும் என்பதுதான் இந்த ஊர்க்குருவிக்கு புரியவில்லை.

**- ஊர்க்குருவி**

# தேசிய சபையை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்!

## பிரதமர் ரணில் உறுதி என்கிறார் கம்மன்பில

**கொழும்பு, மே 17**


**"பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சித் தலைவர்களை இணைத்து தேசிய சபையொன்றை ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்." - இவ்வாறு புதிய ஹெல உறுமயவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

மொட்டுக் கூட்டணியிலிருந்து வெளியேறி சுயாதீனமாக செயல்படும் 10 கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும், பிரதமருக்கும் இடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே உதய கம்மன்பில எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "பிரதமரின் ஆலோசனையின் பிரகாரம் பாராளுமன்றத்தில் 10 துறைசார் மேற்பார்வை குழுக்கள் நிறுவப்படும். அந்தக் குழுக்களில் அங்கம் வகிக்கலாம். அமைச்சுப் பதவிகளை ஏற்காத கட்சித் தலைவர்களை உள்ளடக்கிய வகையில் தேசிய சபை ஒன்றும் ஸ்தாபிக்கப்படவுள்ளது. அத்துடன், விரைவில் வரவு - செலவுத் திட்டம் ஒன்றும் முன்வைக்கப்படும் என்று பிரதமர் குறிப்பிட்டார்" - என்றார். (ஐ)





நல்லூர் சிவன் கோயிலின் அம்மன் பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா நேற்று திங்கட்கிழமை நடைபெற்றபோது...!

(படங்கள் – ஐ. சிவசாந்தன்)

## தேசபந்து, சனத் நிஷாந்த உள்ளிட்ட 24 பேரை கைது செய்ய அறிவுறுத்தல்

கொழும்பு, மே 17

கடந்த 9ஆம் திகதி காலிமுகத்திடல் மற்றும் அலரிமாளிகைப் பகுதியில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள 24 சந்தேக நபர்களை கைது செய்யுமாறு சட்டமா அதிபர் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

குறித்த 24 பேரில் மேல் மாகாணத்துக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனும் உள்ளடங்குவதாக தகவல் வட்டாரங்கள் தெரிவித்தன.

எவ்வாறாயினும், இந்த சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கருதப்படும் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்தவை கைது செய்யுமாறும் சட்டமா அதிபரால் பொலிஸ் மா அதிபருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள் ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## இன்று 4 மணிநேர மின்வெட்டு அமுல்!

கொழும்பு, மே 17

வெசாக் தினத்தை முன்னிட்டு கடந்த இரு நாட்களாக மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டிருக்காத நிலையில் இன்று முதல் மீண்டும் மின்வெட்டு அமுல்படுத்தப்பட உள்ளது.

இதன்படி, இன்று நாடளாவிய ரீதியில் சுழற்சி முறையில் 3 மணிநேரமும் 40 நிமிடங்களுக்கு மின்வெட்டு நடைமுறையாகும். இதற்கமைய, ஏ, பி. சி, டி, ஈ, எவ், ஜி, எச், ஐ, ஜே, கே, எல், பி, கியூ, ஆர், எஸ், ரி, யூ, வி, டபிள்யூ வலயங்களில் காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை 2 மணி நேரமும், மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை ஒரு மணி நேரமும் 40 நிமிடங்களும் மின்வெட்டு அமுலாகவுள்ளது.

மேலும் கொழும்பு முன்னுரிமை வலயங்களில் (CC) காலை 6 மணி முதல் 9 மணி வரையான காலப்பகுதியில் 3 மணிநேரம் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது. (ஐ)

## நீர் மின்சார உற்பத்தி 60 வீதமாக உயர்ந்தது!

கொழும்பு, மே 17

கனமழையால், நீர் மின் உற்பத்தி தற்போது தினசரி மின் உற்பத்தியில் 60 சதவீதமாக அதிகரித்துள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

சமீப காலமாக நாட்டில் நிலவி வறண்ட வானிலை காரணமாக நீர் மின் உற்பத்தி 18 வீதமாகக் குறைந்திருந்தது. தென்மேற்கு பருவமழை தீவிரமடைந்துள்ளதால், ஐந்து மாகாணங்களில் தற்போது கனமழை பெய்து வருகிறது.

மழை காரணமாக மவுஸ்ஸாக்கலை, காசல்ரீ, லக்சபான மற்றும் சமனலவெவ நீர்த்தேக்கங்களிலும் மத்திய மலையக விக்டோரியா, ரந்தெனிகல மற்றும் கொத்மலை நீர்த்தேக்கங்களிலும் நீர் மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது. இதனால் நீர் மின் உற்பத்தி தற்போது தினசரி மின் உற்பத்தியில் 60 சதவீதமாக அதிகரித்துள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu
17.05.2022 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், வைகாசி 03

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# பலமாக இருத்தல் என்பது?

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் நீதியரசர் விக்னேஸ்வரன், நெருக்கடி நிலை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கான ஆதரவை தெரிவித்திருந்தார். அது தொடர்பில் சர்ச்சைகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து, அதற்கு பதிலளித்திருக்கின்றார். அதாவது தனது நிபந்தனைகளை ஏற்றுக் கொண்டால், அவருக்கு ஆதரவு வழங்கத் தயராகவுள்ளாரெனக் குறிப்பிட்டிருக்கின்றார். இங்கு கவனிக்க வேண்டிய விடயம் - ரணில் விக்கிரமசிங்க எந்தவொரு தமிழ் கட்சியிடமும் ஆதரவைக் கோரவில்லை. அதற்கான தேவையும் இப்போதில்லை. பொதுஜன பெரமுன அரசாங்கத்தையே அவர் கொண்டு நடத்தவுள்ளார். இந்த விடயங்களை விளங்கிக் கொண்டுதான் தமிழ் கட்சிகள் விடயங்களை அணுக வேண்டும்.

ரணில் விக்கிரமசிங்கவுக்கும், விக்னேஸ்வரனுக்கும் இடையில் ஓர் ஒற்றுமையுண்டு. அதாவது, இருவருமே பாராளுமன்றத்தில் ஒரேயோர் ஆசனத்தையே வைத்திருக்கின்றனர். ஆனால், ஓர் ஆசனத்தை கொண்டு, ரணில் பிரதமராகியிருக்கின்றார். அது விக்கிரமசிங்கவின் புத்திக்கூர்மைக்கு கிடைத்த சன்மானம். தமிழ்த் தேசியப் பரப்பில் பாரதூரமான தலைமைத்துவ வெற்றிடம் இருக்கின்றது. இதனை சரிசெய்ய முடியாதவர்களே மறுபுறமாக இடைக்கால அரசியல் தீர்வு தொடர்பில் பேசி வருகின்றனர். குறிப்பாக சம்பந்தனுக்கு பின்னரான கூட்டமைப்பின் எதிர்காலம் கேள்விக்குறியாகியிருக்கின்றது. பங்காளிக் கட்சிகளால் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தைக் கொண்டு செல்லக்கூடிய நிலைமை இல்லை.

இந்த நிலையில் ஓர் ஆசனத்துடன் கட்சியை நடத்தும், விக்னேஸ்வரனுக்கான இடம் என்பது, அடுத்த தேர்தல் வரையில்தான். அடுத்த தேர்தலில் அவர் தோல்விடைந்தால் அல்லது, ஒருவேளை அவர் போட்டியிடாது பிறிதொருவர் பரிந்துரைக்கப்பட்டு, அவர் தோல்விடைந்தால், விக்னேஸ்வரனின் கட்சியின் கதை முடிவுக்கு வந்துவிடும். இந்த நிலையில், விக்னேஸ்வரன் பதவியிலிருக்கும் இன்றைய காலம்தான், அவர் உச்சளவில் செயல்படுவதற்கான காலமாகும். இந்தக் காலத்தை, தமிழ் அரசியலை பலப்படுத்துவதற்கு எந்தளவுக்கு பயன்படுத்தலாம் என்பது தொடர்பில்தான் அவர் சிந்திக்க வேண்டும்.

தமிழ்த் தேசிய பரப்பிலுள்ளவர்களை ஒருங்கிணைப்பதற்கான ஒரு புள்ளியாக விக்னேஸ்வரன் தொழில்படலாம். அதற்கு தன்னிடமுள்ள ஓர் ஆசனத்தை அவர் பயன்படுத்தலாம். ஒரு பரந்த கூட்டை உருவாக்குவதில் அவர் வெற்றி பெற்றால், அதற்கான தற்காலிக தலைமைத்துவத்தைக்கூட அவர் பெற வாய்ப்புண்டு. ஆனால், இந்த விடயங்கள் ஒருபோதும் தலைமைத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு, முன்னெடுக்கவும்கூடாது.

தென்னிலங்கை ஒரு நெருக்கடிக்குள் இருக்கின்றது என்பது எந்தளவுக்கு உண்மையோ, அதேயளவிற்கு உண்மை, தமிழர்கள் பலமாக இல்லையென்பதுமாகும். அப்படிப் பார்த்தால், தமிழர்களும் நெருக்கடிக்குள்தான் இருக்கின்றனர். தமிழர்கள் பலமாக இருத்தல் என்பது, தமிழ் மக்கள் - சூழ்நிலைகளை கணித்து, அதற்கேற்ப பேரம் பேசக்கூடிய வலுவானதொரு தலைமைத்துவத்தை கொண்டிருப்பதாகும். அவ்வாறானதொரு தலைமைத்துவம் உருவாகும் வரையில் மேற்கொள்ளப்படும் அனைத்து முயற்சிகளுமே, ஒரு தற்காலிக ஏற்பாடுகள்தான். ஏனெனில், அதற்கு மேல் தற்போதுள்ள அரசியல் கட்சிகளால் பயணிக்கவே முடியாது.

பேரம் பேசுவதற்கு பலமாக இருப்பது அடிப்படையான தகுதியாகும். இல்லாவிட்டால், தமிழர்களுக்கு ஒரு பலமான நாட்டின் பின்புலம் அவசியம். ஒரு பலமான நாட்டின் ஆதரவிருக்கின்றபோது, பலவீனமாக இருப்பது ஒரு பிரச்னையில்லை. ஏனெனில், பலவீனமான நிலையிலிருக்கும் எங்களை பலப்படுத்தும் நோக்கில்தான், அந்த பலமான நாடு இருக்கின்றது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவ்வாறான சூழலும் இல்லை. தமிழர்களுக்கு ஆதரவாக எந்தவொரு பலமான நாடும் இல்லை. அதாவது, முற்றிலும் தமிழரின் நியாயத்தை ஏற்றுக்கொண்டு, தமிழர்களுக்காக செயல்படும் நாடு ஒன்றுமில்லை. இதில் முதன்மையான பங்கை ஆற்றக் கூடிய ஒரேயொரு நாடான இந்தியா, சிங்களவர்களை விரோதித்துக் கொள்ளாத கொள்கையைக் கடைப்பிடிக்க விரும்புகின்றது. எனவே, பலமான நாடுகளின் மூலம், வாய்ப்புக்கள் உருவாகுமென்று எண்ணிக் கொண்டிருப்பது இலவு காத்த கிளிக் கதையாகிவிடலாம். இந்த நிலையில் பலமாக இருத்தல் என்னும் சிந்தனையின் அடிப்படையில், ஆகக் குறைந்தது தற்போது இயங்குநிலையிருக்கும் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் வருவதும், அரசியல் யாப்பில் மேற்கொள்ளப்படும் மாற்றங்களை உச்சளவில் பயன்படுத்திக் கொள்வதும்தான் இன்றைய நிலைக்கு ஏற்புடையது. இப்போது இது ஒன்றுதான் சாத்தியமானது. இதைத் தவறவிட்டால், இந்த நெருக்கடி நிலைமை தணிகின்றபோது, தமிழரின் விடயம் முற்றிலுமாக நீர்த்துப் போய்விடும்.

# பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் நல்லெண்ணம் !

அனந்த பாலகிடணர்

*இறந்தோரை நினைவுகூருவதில் எந்தவொரு தடையும் இருக்கலாகாது என்று பிரதம மந்திரியாக தற்சமயம் பொறுப்பேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார். நாளைய தினம் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் வடக்கு - கிழக்கு யுத்தத்தின்போது இறந்தோர் ஞாபகார்த்தமாக இடம்பெறவுள்ளன. இதனை முன்னிட்டு வடக்கு- கிழக்கின் பல்வேறு இடங்களிலிருந்தும் ஊர்வலங்கள் முள்ளிவாய்க்கால் நோக்கி நகர்ந்த வண்ணமுள்ளன.*

*முள்ளிவாய்க்காலில் இறுதிக்கட்ட யுத்தத்தின்போது ஏற்பட்ட மனித அவலம் விபரிக்க முடியாதது. நாலாபுறத்திலிருந்தும் ஷெல் வீச்சு, ஆட்லறி எறிகணை வீச்சு என்பவற்றுக்கு மத்தியில் உயிரைக் கையில் பிடித்தவர்களாக அப்பாவி மக்கள் தம்மைக் காப்பாற்றிக் கொள்ள பரிதவித்து நின்றனர்.*

*மூன்று தசாப்தகாலமாக இடம்பெற்ற வடக்கு-கிழக்கு யுத்தம் மிக மூர்க்கத்தனமான முறையில் நினைத்துப்பார்க்க முடியாத மனித அவலங்களோடு முள்ளிவாய்க்காலில் 2009 மே 18ஆம் திகதி முடிவுக்கு வந்திருந்தது.*

*யுத்தம் முடிவுக்கு வந்து நாட்டில் அமைதியான சூழல் திரும்பிவிட்டது என்ற மாயையை ஏற்படுத்த அரசு எடுத்த முயற்சிகளை முறியடிப்பனவாகவே தற்சமயம் காலிமுகத்திடலில் “கோட்டா கோ கம“ ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறுகின்றன. அத்துடன், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவையும் கைது செய்யுமாறு கோரும் கோஷம் கடந்த சில தினங்களாக வலுவடைந்து வருகின்றது.*

*முள்ளிவாயக்காலில் இடம்பெற்ற இறுதிக்கட்ட யுத்தத்தின் வெற்றியில் கடந்த பதின்மூன்று வருடங்களாக குளிர்காய்ந்த அரச தரப்பினரின் முகத்திரை தற்சமயம் கிழித்தெறியப்பட்டுள்ளது. முள்ளிவாய்க்கால் யுத்த வெற்றியையடுத்து நாட்டில் சீரழிந்து கிடந்த பொருளாதார நெருக்கடியை சீர் செய்வதை விடுத்து முழு நாட்டையுமே குட்டிச்சுவராக்கும் விதத்தில் பொருளாதார ரீதியான ஊழல் , மோசடிகளில் ராஜபக்ஷ குடும்பத்தினர் ஈடுபட்டார்கள் என்ற குற்றச்சாட்டுகளின் பேரிலேயே தற்போது காலிமுகத்திடலில் கோட்டா கோ கம என்ற கற்பனைக் கிராமம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அங்கே இன்றைய அரசுமீது அதிருப்தி கொண்டுள்ளவர்களால் கடந்த ஒரு மாதத்துக்கும் மேலாக ஜனாதிபதி ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ராஜபக்ஷ ஆகியோருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும் வலுவடைந்துள்ளன.*

*மறுபுறத்தே, வடக்கே முள்ளிவாய்காலில் அரச தரப்பினரால் ஏற்படுத்தப்பட்ட மனித அவலத்தை வெளிப்படுத்துவதாக முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு காணப்படுகின்றது.*

*காலிமுகத்திடல் கோட்டா கோ கம ஆர்ப்பாட்டமும் நாளைய தினம் முள்ளிவாய்க்காலில் இடம்பெறவுள்ள நிவைவேந்தல் நிகழ்வும் இன்றைய ஆட்சியாளர்கள் நாட்டு மக்களின் விசுவாசத்தை பெறத் தவறிவிட்டனர் என்பதையே வெளிப்படுத்துகின்றது.*

*கூடவே, 2019ஆம் ஆண்டு ஏப்ரலில் இடம்பெற்ற உயிர்த்த ஞாயிறு தின குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இன்றைய ஆட்சியாளர்கள் ஓர் ஐக்கியமான தேசத்தில் நாட்டு மக்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து நல்லிணக்கத்துடன் கூடிய ஆட்சியொன்றை நடத்த தகுதியற்றவர்கள் என்பதை மேலும் நிரூபித்துள்ளது.*

*இத்தகைய பின்னணியிலேயே புதிய பிரதமராக பதவியேற்றுள்ள ரணில் விக்கிரமசிங்க முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை நடத்துவதற்கு தடை எதுவும் இல்லை எனத் தெரிவித்துள்ளார். அதேசமயம் இறந்த ஆத்மாக்களை வைத்து அரசியல் நடத்தக் கூடாதெனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.*


*புதிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நாட்டு மக்களில் பெரும்பாலானவர்களால் வெறுக்கப்பட்டுள்ள ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசில் பிரதமராக பதவியேற்றுள்ளதை நோக்கும்போது ஒரு சீனப்பழமொழியே நினைவுக்கு வருகின்றது. “சிங்கத்தின் குகைக்குள் நுழையாது சிங்கக் குட்டிகளை எடுக்க முடியாது“ என்பதே அச்சீனப்பழமொழியாகும்.*

*ஆகவே, தற்போது எதிர்க்கட்சிகளின் தரப்பிலிருந்து கொண்டு எதனையும் அதிகாரபூர்வமாக செய்ய முடியாதென்பதே உண்மையாகும். நாட்டு நிலைமை பொருளாதார ரீதியாக மோசமாகியுள்ள நிலையில் அரசியல் அனுபவமற்ற ஒருவர் நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக ஆட்சியில் இருக்கும் போது அவருக்கு உரிய ஆலோசனைகளை வழங்கி நாட்டு நிலமையை சீர்செய்வதே ஒரு நல்ல தலைமைத்துவ பண்புடையவரின் நடவடிக்கையாக இருக்க முடியும்.*

*பிரதமர் ரணில் விக்கிரமசிங்ககூட தற்போதைய மிக இக்கட்டான பொருளாதார நிலவரத்தை சீர்செய்யவே பிரதமர் பதவியைத் தாம் ஏற்றுக்கொண்டதாக தெரிவித்துள்ள நிலையில் உறுதியான ஒரு பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப இன ரீதியான நல்லிணக்கமே இன்றியமையாததாகும். “சுவர் இருந்தால் மட்டுமே சித்திரம் வரைய முடியும்“.*

*இந்நிலையில் காத்திரமான பொருளாதாரம் என்ற ஓவியத்தை வரைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தேர்ந்தெடுத்த தூரிகையே இன நல்லிணக்கமாக இருக்கின்றது. இந்தத் தூரிகை மூலம் அவர் முதலாவதாக போட்டுள்ள “பிள்ளையார் சுழியே” முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை தடுக்கக் கூடாதென்ற பணிப்புரையாகும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு






**மேடம்**
இன்று உங்கள் செயலில் கவனமுடன் செயல்படவும். விழிப்புணர்வு தேவை. குழப்பங்கள் வந்து மறையும். புதிய முயற்சி இன்று வேண்டாம். எதிர்பாராத சிரமங்களை ஏற்படும்.

**இடபம்**
நண்பர்கள் வழியே லாபம் அடைவீர்கள். மகிழ்ச்சியான நாள். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்னை விலகும். ஆதாயம் அதிகரிக்கும். தொழிலில் லாபம் உண்டாகும். எதிர்பாராத நன்மை அடைவீர்கள்.

**மிதுனம்**
இன்று அரசு வகையில் நீங்கள் எதிர்பார்த்த ஒன்று நிறைவேறும். மற்றவரால் மூலம் புதிய அனுபவம் ஒன்றை பெறுவீர்கள். நேற்றைய பிரச்னை ஒரு முடிவிற்கு வரும். நிம்மதி காணும் நாள்.

**கடகம்**
உங்களுடைய முயற்சி பலிதமாகும். பணியிடத்தில் எதிர்பார்த்திருந்த ஒன்றில் ஆதாயம் காண்பீர்கள். உங்களோடு இருப்பவர்களில் நல்லவர் யார் என்பதை தெரிந்து கொள்வீர்கள்.

**சிம்மம்**
பயணங்களில் அலைச்சல் உண்டானாலும் அதனால் லாபம் உண்டு. உறவினர் வருகையால் சுபச்செலவு உண்டாகும். தொழிலில் இருந்த தடை விலகும். நிதி நிலை சீராகும்.

**கன்னி**
வர வேண்டிய பணம் கைக்கு வரும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். அரசு வழியில் எதிர்பார்த்த செயலில் இன்று அனுகூலம் அடைவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி அடைவீர்கள்.

**துலாம்**
பணியிடத்தில் நேற்று இருந்த சோர்வு விலகி உற்சாகமாக செயல்படுவீர்கள். பழைய பிரச்னை ஒன்று முடிவிற்கு வரும். உங்கள் முயற்சிக்கு பலன் உண்டு. எதிர்பார்த்த செயலில் லாபம் காண்பீர்கள்.

**விருட்சிகம்**
பேச்சிலும், செயலிலும் கவனம் தேவை. விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டிய நாள். எதிரிகளால் தொல்லை உண்டு. தேவையற்ற குழப்பங்கள் உண்டாகும். சங்கடம் தோன்றி மறையும்.

**தனுசு**
சுபச்செலவு அதிகரிக்கும். அதற்கேற்ப வரவுகளும் வந்து சேரும். புதிய முயற்சி கை கூடும். குடும்பத்தில் மகிழ்ச்சி காணப்படும். ஒரு சிலரின் விமர்சனத்தால் மன அழுத்தம் அடைய வேண்டாம்.

**மகரம்**
நினைத்தது நிறைவேறும். உங்களுக்கு வேண்டியதை இன்று அடைவீர்கள். பழைய பிரச்னைக்கு இன்று முடிவு காண்பீர்கள். நிம்மதியான நாள். திடீர் வருமானம் உண்டாகும்.

**கும்பம்**
உறவினர் ஒருவரால் நன்மை ஒன்றை அடைவீர்கள். வியாபாரத்தை விரிவு செய்யும் முயற்சியில் வெற்றி காண்பீர்கள். புதிய வாய்ப்புகள் உங்களைத் தேடி வரும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மீனம்**
உங்கள் முயற்சி வெற்றி அடையும். குடும்பத்தில் பெருமிதம் கொள்வார்கள். உத்தியோகத்தில் உங்கள் திறமை மதிக்கப்படும். மகிழ்ச்சி கூடும். வேலையில் இழுபறி உண்டானாலும் முடிவு உங்களுக்கு சாதகமாகும்.

# இலங்கையின் நிலைமை விரைவில் தமிழகத்துக்கும்

## இப்படி எச்சரிக்கிறார் சீமான்



சென்னை, மே 17

"அத்தியாவசியப் பொருட்கள் விலையேற்றம், பின்னலாடைத் தொழிலுக்கான நூல் விலையேற்றம் இப்படி ஒவ்வொன்றாக ஆரம்பித்து, கடைசியாக சகிக்க முடியாத எதிர்கொள்ள முடியாத புரட்சியாக வந்துவிடும். அதுதான் இலங்கையில் நடக்கிறது, அது இங்கு விரைவில் நடக்கும்" என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கூறியுள்ளார்.

நேற்று நிகழ்வு ஒன்றில் பங்கேற்று உரையாற்றிய அவர், "இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார சீரழிவு இங்கு நடப்பதற்கு வெகு நாட்கள் இல்லை. சொத்துவரி ஏற்றத்தை எடுத்துக் கொண்டால், 80 விழுக்காடு மக்கள் வாடகை வீட்டில்தான் வசிக்கின்றனர்.

அரசு வரியை உயர்த்தும்போது, வீட்டின் உரிமையாளர் வாடகையை உயர்த்துவார், வரி செலுத்துவதற்காக 7 ஆயிரம் ரூபாய்க்கு குடியிருந்தால், 14 ஆயிரம் கட்ட வேண்டும். அரசுக்கு வரிப்பெருக்கம் உள்ளது, மக்களுக்கு வருவாய் பெருக்கம் உள்ளதா? அதே சம்பளத்தில் தான் வாழனும்.

அத்தியாவசியப் பொருட்கள் விலையேற்றம், பின்னலாடைத் தொழிலுக்கான நூல் விலையேற்றம் இப்படி ஒவ்வொன்றாக ஆரம்பித்து, கடைசியாக சகிக்க முடியாத எதிர்கொள்ள முடியாத புரட்சியாக வந்துவிடும். அதுதான் இலங்கையில் நடக்கிறது, அது இங்கு விரைவில் நடக்கும் - என்றார். (ஐ)

# முதல் புனிதர் பட்டம் பெற்ற தமிழரானார் தேவசகாயம்!

## -ரோமில் ஒலித்தது தமிழ்த் தாய் வாழ்த்து -



நாகர்கோவில், மே 17

கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மறைசாட்சி தேவசகாயத்துக்கு நேற்று முன்தினம் ரோமில் நடைபெற்ற விழாவில் புனிதர் பட்டத்தை போப் பிரான்சிஸ் வழங்கினார். இதன் மூலம் புனிதர் பட்டம் பெற்ற முதல் தமிழர் என்ற பெருமையை தேவசகாயம் பெற்றார்.

இந்த நிகழ்வின்போது, கத்தோலிக்க அருட்சகோதரிகள் 6 பேர் தமிழ்த்தாய் வாழ்த்து பாடல் பாடினர். செந்தமிழில் ஒலித்த தமிழ்த்தாய் வாழ்த்து, அங்கிருந்த தமிழகத்தைச் சேர்ந்த அமைச்சர்கள், ஆயர்கள் மற்றும் பார்வையாளர்களை வெகுவாக கவர்ந்தது.

கன்னியாகுமரி மாவட்டம் நட்டாலத்தைச் சேர்ந்தவர் தேவசகாயம். நீலகண்டன் என்ற இயற்பெயர் கொண்ட இவர், திருவிதாங்கூர் மன்னர் மார்த்தாண்ட வர்மாவின் அரசவை அலுவலராக இருந்தார். மேக்கோட்டையைச் சேர்ந்த பார்கவியை திருமணம் செய்துகொண்டார்.

1741ஆம் ஆண்டு திருவிதாங்கூர் படைகளுக்கும், போர்த்துக்கேய படைகளுக்கும் இடையே நடைபெற்ற போரில் போர்த்துக்கேய தளபதி பெனடிக்ட் டிலனாய், மன்னர் மார்த்தாண்ட வர்மாவால் போர் கைதியாக சிறை பிடிக்கப்பட்டார். கத்தோலிக்கரான டிலனாயின் நண்பரானார் நீலகண்டன். பின்னர் 1745 மே 14ஆம் திகதி வடக்கன்குளத்தில் திருக்குடும்ப கோயிலில் திருமுழுக்கு பெற்று நீலகண்டன் கிறிஸ்தவ மதத்தை தழுவினார். அவருக்கு லாசர் என்னும் விவிலிய பெயர் தமிழில் தேவசகாயம் என சூட்டப்பட்டது.

அதன்பின் ராஜதுரோகம், குலதுரோகம் போன்ற குற்றங்கள் சாட்டப்பட்டு, 1749 பிப்ரவரி 23ஆம் திகதி தேவசகாயம் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அவரின் பதவிகள் பறிக்கப்பட்டன. பல துன்பங்களுக்கு உட்படுத்தப்பட்ட அவர் இயேசு கிறிஸ்துவின்மீதும், அவரது போதனைகள்மீதும் பற்றுறுதியுடன் இருந்தார். அவரை யாரும் அறியாத வகையில் கொன்றுவிட திட்டமிடப்பட்டது.

1752ஆம் ஆண்டு ஜனவரி 14ஆம் திகதி நள்ளிரவில் கன்னியாகுமரி மாவட்டம் ஆரல்வாய்மொழி காற்றாடிமலையில் 5 துப்பாக்கி குண்டுகளால் தேவசகாயம் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரின் உடல் பாறையிலிருந்து கீழே தள்ளிவிடப்பட்டு, வனவிலங்குகளுக்கு உணவாக்கப்பட்டது.

தேவசகாயத்தின் மரணம் 3 நாட்களுக்கு பின்னரே வெளியே தெரியத்தொடங்கியது. அவரின் உடலின் எஞ்சிய பகுதிகளை மக்கள் கண்டுபிடித்தனர். அவை சேகரிக்கப்பட்டு நாகர்கோவில் கோட்டாறு புனித சவேரியார் தேவாலயத்தின் பலி பீடத்துக்கு முன் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்று முதல் மக்களால் தேவசகாயம் புனிதராக போற்றப்பட்டு வந்தார்.

இந்நிலையில், வாடிகனில் தேவசகாயத்தின் புனிதர் நிலை ஏற்பு கடந்த ஆண்டு பெப்ரவரி 21ஆம் திகதி நடைபெற்றது. அவரை போப் பிரான்சிஸ் புனிதராக ஏற்றுக்கொண்டார். கடந்த ஆண்டு மே 3ஆம் திகதி ரோம் புனித பேதுரு பேராலயத்தில் தேவசகாயத்துக்கு புனிதர் பட்டம் வழங்கும் நிகழ்வை நடத்த முடிவு செய்யப்பட்டது. ஆனால், அப்போது உலகம் முழுவதும் கொரோனா பாதிப்பு இருந்ததால் அந்நிகழ்வு தள்ளிவைக்கப்பட்டது.

இந்நிலையில், வத்திக்கானில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கிய விழாவில் மறைசாட்சி தேவசகாயத்துக்கு புனிதர் பட்டத்தை போப் பிரான்சிஸ் நேற்றுமுன்தினம் வழங்கினார். இதன் மூலம் புனிதர் பட்டத்தை பெற்ற முதல் தமிழரானார். தேவசகாயம்.

இந்நிகழ்வில் தமிழகத்தை சேர்ந்த ஆயர்கள், அருட்தந்தையர்கள், அமைச்சர்கள் எனப் பலர் பங்கேற்றனர். (ஐ)

ஈழநாடு



# பொருளாதார நெருக்கடி நிலை; அறிக்கைகள் அனைத்தும் தயார்

## விரைவில் பிரதமரிடம் கையளிக்கப்படும்

கொழும்பு, மே. 17

**பெற்றோலிய வளம் , அத்தியாவசிய உணவுப் பொருட்கள், மருந்துப் பொருட்கள், மற்றும் உரங்கள் தொடர்பான நெருக்கடிகள் குறித்து ஆராய நியமிக்கப்பட்ட விசேட குழுக்களின் அறிக்கையை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் சமர்ப்பிக்கவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.**

ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் நாயகம் பாலித ரங்கே பண்டார கையொப்பமிட்ட அறிக்கையில், பிரச்னைகளுக்கான காரணங்கள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கு எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பது குறித்து, நியமிக்கப்பட்டுள்ள குழுக்களுடன் ஆலோசிக்கும் வகையில், முன்னாள் அமைச்சர்கள் மற்றும் தலைவர்களுடன் கூட்டமொன்றைக் கூட்டி ஏற்கனவே அதற்கான அறிக்கைகள் தொகுக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள் ளது.

அதற்கமைய நியமிக்கப்பட்டுள்ள குழுக்களின் செயற்பாடுகள் தொடர்ந்தும் இடம்பெறும் என்றும், இதன் சாதகத்தன்மையை மக்கள் விரைவில் அனுபவிப்பார்கள் எனவும் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார். (அ)

# உடரட்ட ரயில் போக்குவரத்து பாதிப்பு!

கொழும்பு, மே. 17

ரயில் ஒன்று நேற்று தடம் புரண்டதால் பிரதான வீதியில் ரயில் சேவை பாதிக்கப்பட்டது.

ரம்புக்கணை மற்றும் கடிகமுவ ரயில் நிலையங்களுக்கு இடையில் நேற்று காலை இந்த ரயில் தடம் புரண்டது.

கண்டியில் இருந்து கொழும்பு கோட்டை நோக்கி பயணித்த ரயில் ஒன்றே இவ்வாறு தடம் புரண்டது.

அண்மையில் எரிபொருள் ஏற்றிச் சென்ற ரயில் தடம் புரண்ட அதே இடத்தில் இந்த ரயிலும் தடம் புரண்டதாக தெரிவிக்கப்பட்டது.

இதன்படி, உடரட்ட ரயில் வீதியில் பயணிக்கும் அனைத்து ரயில்களும் ரம்புக்கணை ரயில் நிலையத்தில் தற்காலிகமாக நிறுத்தப்படும் என ரயில்வே திணைக்களம் தெரிவித்தது. (அ)

# முள்ளிவாய்க்கால் நினைவாக பாரதிபுரத்தில் கஞ்சி வழங்கல்!



கிளிநொச்சி, மே. 17

முள்ளிவாய்க்கால் நினைவாக பாரதிபுரம் பகுதியில் கஞ்சி வழங்கும் நிகழ்வு முன்னெடுக்கப்பட் டது.

பாரதிபுரம், மலையாளபுரம், கிருஸ்ணபுரம் இளைஞர்களின் ஏற்பாட்டில் குறித்த நிகழ்வு நேற்று முற்பகல் 10 மணியளவில் சூசையப்பர் சிற்றாலயம் முன்பாக இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் கரைச்சி பிரதேச சபைத் தவிசாளரும் கலந்து கொண்டார். (அ)

# மே 18 இல் புலிகள் மீண்டும் தாக்க திட்டம் இந்திய புலனாய்வு பிரிவிடம் விசாரணை

## பாதுகாப்புச் செயலர் கூறுகிறார்



கொழும்பு, மே. 17

மே மாதம் 18ஆம் திகதியன்று தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீண்டும் ஒருங்கிணைந்து இலங்கை மீது தாக்குதல் நடத்துவதற்குத் திட்டமிட்டுள்ளது என இந்தியாவின் 'த ஹிந்து' வெளியிட்டுள்ள செய்தி தொடர்பில் இலங்கை புலனாய்வுப் பிரிவு, இந்தியப் புலனாய்வுப் பிரிவி டம் வினவியுள்ளது என இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை முன்னிட்டு, இந்தத் தாக்குதலை நடத்துவதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் திட்டமிடப்பட்டுள்ளது எனக் கடந்த 13ஆம் திகதி 'த ஹிந்து' செய்தி வெளியிட்டிருந்தது.

இந்தியப் புலனாய்வுத் தகவல்களை குறிப்பிட்டே அந்தச் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

இந்நிலையில், இது வழமையான புலனாய்வுத் தகவல் என இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர் என்று இலங்கை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தத் தகவல் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் மேலதிக தகவல் கிடைக்கும் பட்சத்தில் அதனை அறிவிப்பதாகவும் இந்தியப் புலனாய்வுப் பிரிவு, இலங்கைப் புலனாய்வுப் பிரிவிடம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் வெளியிட்டுள்ள இந்தத் தகவல் உள்ளிட்ட தேசிய பாதுகாப்பு தொடர்பில் புலனாய்வு மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு கிடைக்கும் அனைத்து தகவல்களையும் உரிய முறையில் ஆராய்ந்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு அறிவித்து பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்-என்றார். (அ)

# முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றத்துக்கு செல்ல கிளிநொச்சியில் இருந்து விசேட போக்குவரத்து

கிளிநொச்சி, மே. 17

கிளிநொச்சியில் இருந்து முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றத்தைச் சென்றடையும் வகையில் விசேட போக்குவரத்து ஏற்பாடுகள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி,

1. காலை 8.00 மணிக்கு முழங்காவிலில் இருந்து புறப்படும் பேருந்து வாடியடி, பரந்தன் ஊடாகவும்

2. காலை 8.30 மணிக்கு, பளை நகரில் அமைந்துள்ள தமிழ் அரசுக் கட்சியின் பச்சிலைப்பள்ளிப் பிரதேச அலுவலகத்திலிருந்து புறப்படும் பேருந்து புதுக்காடு, இயக்கச்சி, பரந்தன் ஊடாகவும்

3. காலை 9.00 மணிக்கு பரந்தன் சந்தியிலிருந்து புறப்படும் பேருந்து முரசுமோட்டை, கண்டாவளை, புன்னைநீராவி ஊடாகவும்

4. காலை 9.00 மணிக்கு வட்டக்கச்சி சந்தையடியிலிருந்து புறப்படும் பேருந்து புளியம் பொக்கணைச் சந்தி ஊடாகவும்

5. காலை 9.00 மணிக்கு கிளிநொச்சி கந்தசுவாமி கோவிலுக்கு முன்பாக உள்ள, தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்திலிருந்து புறப்படும் பேருந்து கரடிப்போக்கு, பரந்தன் ஊடாகவும் முள்ளிவாய்க்கால் நினைவுமுற்றத்தைச் சென்றடைந்து, நினைவேந்தல் நிகழ்வுகள் நிறைவுற்றதும் அதே வழித்தடத்தின் ஊடாக மீளத் திரும்பவுள்ளன.

நினைவேந்தலில் பங்கேற்கவுள்ள கிளிநொச்சி மாவட்ட மக்கள், மேற்படி பேருந்துகளைப் பயன்படுத்தி, தங்களின் போக்குவரத்து இடையூறுகளைத் தவிர்த்துக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# காலி முகத்திடல் தாக்குதல் சம்பவத்தில் தொடர்புடையவர்கள் கைது செய்யப்படாமைக்கு சட்டத்தரணிகள் சங்கம் கண்டனம்!

கொழும்பு, மே. 17

காலி முகத்திடலில் அமைதியான முறையில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது, தாக்குதல் நடத்தியவர்கள் மாத்திரம் இதுவரை கைது செய்யப்படாமை கண்டனத்திற்குரிய விடயமாகும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன் நிறைவேற்று குழுவின் உறுப்பினர் சட்டத்தரணி நுவன் போபகே இதனைத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையதாக நேற்று முன்தினம் வரை 230பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

எந்தவொரு பகுதியிலும், வன்முறைச் சம்பவங்கள் பதிவாவதை சட்டத்தரணிகள் என்ற வகையில் ஏற்றுக்கொள்வதில்லை.

அதனுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட வேண்டும்.

வன்முறைகளில் ஈடுபட்டிருந்தவர்கள், முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அழைப்பின் பேரில் அலரி மாளிகைக்கு வந்திருந்தனர்.இதில் சில பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தொடர்புள்ளது.

எனவே, காலி முகத்திடல் போராட்டத்தில் ஈடுபட்ட வர்கள் மீது தாக்குதல் நடத்தியவர்கள் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும் என இலங்கை சட்டத்தர ணிகள் சங்கத்தின் நிறைவேற்றுக் குழுவின் உறுப்பினர் சட்டத்தரணி நுவன் போபகே குறிப்பிட்டார். (அ)

# எந்த மத அடையாளங்களுக்கும் ஆரியகுளத்தில் இடம் இல்லை!

## யாழ்.மாநகர சபை உறுப்பினர்கள் தீர்மானத்தில் உறுதி

**யாழ்ப்பாணம், மே 17**

**யாழ்ப்பாணம் மாநகர சபையினால் பரிபாலிக்கப்படும் ஆரியகுளத்தினுள் வெசாக் கூடுகளைக் கட்டுவதற்கு அனுமதிக்குமாறு படைத்தரப்பினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை யாழ். மாநகர சபை நிர்வாகம் நிராகரித்துள்ளது.**

நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமையும், நேற்று திங்கட்கிழமையும் வெசாக் கொண்டாட்டங்கள் இடம்பெற்ற நிலையில் நேற்றுமுன்தினம் யாழ். மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலனைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட படை அதிகாரி ஒருவர் ஆரிய குளத்தினுள் வெசாக் கூடுகளைக் கட்டுவதற்கு அனுமதிக்குமாறு கோரிக்கையை முன்வைத்தார். எனினும் ஆரிய குளம் பகுதியில் எந்தக் காலத்திலும், எந்த மத அடையாளங்களையும் காட்சிப்படுத்த அனுமதிப்பதில்லை என யாழ். மாநகர சபையில் கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் தீர்மானம் இயற்றப்பட்டிருப்பதனால், சபை அனுமதி இல்லாமல் வெசாக் கூடுகளைக் கட்டுவதற்கு அனுமதிக்க முடியாது என ஆணையாளர் தெரிவித்த தாக்க் கூறப்படுகிறது.

இதனையடுத்து, ஆணையாளருடன் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்ட வடக்கு மாகாண ஆளுநர், ஆரியகுளத்தினுள் வெசாக் கூடுகளைக் கட்டுவதற்கு அனுமதிக்குமாறும், தவறும் பட்சத்தில் தனக்கு இருக்கும் அதிகாரத்தைப் பயன்படுத்தி யாழ்ப்பாணம் மாநகர சபையைக் கலைக்கவேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவித்ததையடுத்து யாழ். மாநகர சபை உறுப்பினர்களுக்கான அவசர கூட்டம் ஒன்று ஆணையாளரினால் நிகழ்நிலையில் நடத்தப்பட்டது.

யாழ். மாநகர முதல்வர் வி. மணிவண்ணன் விடுமுறையில் வெளிநாடு சென்றிருப்பதனால், பிரதி முதல்வர் து.ஈசன் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. மாநகர முதல்வரும் வெளிநாட்டிலிருந்தவாறே கூட்டத்தில் கலந்து கொண்டார்.

வெசாக் கொண்டாட்டப்படும் திகதி நிர்ணயிக்கப்பட்ட ஒரு தினம் ஆகையால் போதிய கால இடைவேளையில்லாமல் வெசாக் தினத்தன்று, அதுவும் தொலைபேசி வாயிலாக அனுமதி கோரப்பட்டமை உறுப்பினர்களிடையே விசனத்தை ஏற்படுத்தியிருப்பதுடன், முறையான எழுத்து மூல அனுமதி கோரப்படுமிடத்து அதுபற்றி பரிசீலிக்கலாம் எனவும் கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் தீர்மானித்துள்ளனர். இது பற்றி வடக்கு மாகாண ஆளுநருக்கும், உள்ளூராட்சி ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# 03 நாள்களுக்கு எரிபொருள் வரிசையில் நிற்கவேண்டாம்

## அமைச்சர் காஞ்சன கோரிக்கை

கொழும்பு, மே 17

எதிர்வரும் மூன்று நாள்களுக்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வரிசையில் நிற்க வேண்டாம் எனவும், தேவையில்லாமல் எரிபொருளை சேமித்து வைப்பதை தவிர்க்குமாறும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர பொதுமக்களிடம் கேட்டுள்ளார்.

டீசல் ஏற்றி வந்த கப்பல் ஒன்று நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்ததுடன், இந்திய கடன் வசதியின் கீழ் மேலும் மூன்று கப்பல்கள் அடுத்த இரண்டு வாரங்களுக்குள் நாட்டை வந்தடைய உள்ளன.

அதன்படி, போதுமான அளவு எரிபொருள் இருப்பு இருக்கும் என எரிசக்தி அமைச்சர் தனது கீச்சகப் பதிவில் தெரிவித்துள்ளார்.

ஆயிரத்து 190 எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு எரிபொருள் விநியோகம் செய்யப்பட உள்ளதால், எரிபொருள் நிரப்புவதற்கு வரிசையில் காத்திருக்க வேண்டாம் என அமைச்சர் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# சீரற்ற காலநிலையினால் 820 குடும்பங்கள் பாதிப்பு

கொழும்பு, மே 17

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக ஒருவர் காயமடைந்துள்ளதுடன், ஆயிரத்து 820 குடும்பங்களைச் சேர்ந்த 7ஆயிரத்து 337 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும் கடும் மழையுடன் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிலைமை சீரடைந்து வருவதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

எனினும் சீரற்ற காலநிலை காரணமாக சுமார் 52 குடும்பங்களைச் சேர்ந்த 209 பேர் தற்காலிக தடுப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த நிலையம் கூறியுள்ளது. (அ)

# அத்தியாவசிய பொருள்கள் ஏற்றிச் செல்லும் லொறிகளுக்கு எரிபொருள் வழங்க ஏற்பாடு

கொழும்பு, மே 17

அத்தியாவசிய பொருள்களை ஏற்றிச் செல்லும் பாரவூர்திகளுக்கு எரிபொருள் வழங்கும் சிறப்பு வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதன் கீழ், நாடுமுழுவதும் தெரிவு செய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அத்தியாவசிய பொருள்கள் பாரவூர்திகளுக்கு எரிபொருள் விநியோகம் செய்யப்படும்.

மருந்துகள், எரிவாயு, காய்கறிகள் மற்றும் உணவுப் பொருள்கள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கே இந்த திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. (அ)

# 65,000 மெற்றிக் தொன் யூரியாவை இலங்கைக்கு வழங்குகிறது இந்தியா

கொழும்பு, மே 17

65,000 மெற்றிக் தொன் யூரியாவை இலங்கைக்கு உடனடியாக அனுப்ப இந்தியா எடுத்துள்ள தீர்மானத்துக்கு டில்லியிலுள்ள இலங்கைத் தூதர் மிலிந்த மொரகொட நன்றி தெரிவித்துள்ளார்.

"இலங்கையிலுள்ள 2.2 கோடி மக்கள்தொகையில் 70 சதவீதம் பேர் விவசாயத்தை சார்ந்து வாழ்ந்து வருகின்ற நிலையில், ஆண்டுதோறும் 40 கோடி அமெரிக்க டொலருக்கு இலங்கை உரங்களை இறக்குமதி செய்துவந்தது.

இயற்கை விவசாயத்தை ஊக்குவிப்பதற்கான ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தீர்மானத்துக்கமைய கடந்த ஆண்டு ரசாயன உரங்களின் பயன்பாட்டுக்கு தடை விதிக்கப்பட்டது.

போதிய அளவில் இயற்கை உரங்கள் கிடைக்காததாலும் மோசமான வானிலையாலும், நெல், தேயிலை போன்றவற்றின் உற்பத்தியும் இலங்கையில் வெகுவாக குறைந்தது. இதுவும் இலங்கையின் பொருளாதார நெருக்கடிக்குக் காரணம்.

உரத்துறை செயலாளர் சதுர்வேதியை அண்மையில் சந்தித்து பேசிய மிலிந்த மொரகொட, இலங்கையில் பெரும்போக விவசாயத்துக்கான யூரியாவை விநியோகம் செய்வது தொடர்பாக நடத்திய ஆலோசனையை அடுத்தே இந்தியா இணக்கம் தெரிவித்துள்ளது என கூறப்பட்டது. (அ)

# மே 9 தாக்குதல் சூத்திரதாரிகளை கைது செய்வதில் தாமதம் ஏன்?

## பொலிஸ்மா அதிபரை கேட்கிறார் ருவன் விஜேவர்த்தன

கொழும்பு, மே 17

மே மாதம் 9ஆம் திகதி அலரி மாளிகை மற்றும் காலி முகத்திடல் மைதானத்திற்கு எதிரே அமைதிவழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் மீது தாக்குதல் நடத்திய நபர்களை உடனடியாக கைது செய்யுமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜேவர்தன பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்த சம்பவங்களில் முக்கிய குற்றவாளிகள் இன்னும் தலைமறைவாக உள்ளதாகவும், இது வரை ஒருவரே கைது செய்யப்பட்டுள்ளதாகவும் முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து நாடு பூராகவும் வெடித்த வன்முறைகளால் ஒன்பது உயிர்கள் பலியாகியுள்ளதுடன் ஏராளமான பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு சேதம் ஏற்பட்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் குறிப்பிட்டார்.

எனவே ஏறக்குறைய ஒரு வாரம் கடந்தும் இன்னும் அதிகமானோர் கைது செய்யப்படாதது கவலை அளிக்கிறது என்று அவர் கூறினார்.

இந்த தாக்குதலின் பின்னணியில் நேரடியாக செயற்பட்ட நபர்களின் பெயர்களுடன் நீதிமன்றில் சமர்பிக்கப்பட்ட நிலையில் இது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

காலி முகத்திடல் போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடி அவர்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பதற்கான தீர்மானங்களை மேற்கொள்ளும் பணியை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தமக்கு வழங்கியுள்ளதாக ருவான் விஜேவர்தன மேலும் தெரிவித்தார்.

தாக்குதல் நடத்தியவர்களை கைது செய்வதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால், போராட்டக்காரர்களின் நம்பிக்கையை பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்குவதாக அவர் கூறினார்.

எனவே, கடந்த வாரம் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் விரிவான விசாரணைகளை நடத்தி, அதற்குக் காரணமான அனைவரையும் சட்டத்தின் முன் நிறுத்துமாறு ருவான் விஜேவர்தன பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# மஹிந்தவின் நாய்க்குட்டியை திருடிய யுவதி கைதாகினார்!

கொழும்பு, மே 17

வீரகெட்டியவிலுள்ள மஹிந்த ராஜபக்ஷவின் கார்ல்டன் தோட்டத்தின் மீது பொதுமக்கள் தாக்குதல் நடத்தி, தீ வைத்திருந்தனர். இதன்போது, மஹிந்த ராஜபக்ஷவின் நாய்க்குட்டி காணாமல் போயிருந்தது.



அந்த நாய்க்குட்டியை வைத்திருந்த யுவதி ஒருவரை வீரகெட்டிய பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தனது வீட்டின் முன் நாய்க்குட்டி நின்றதாக கூறி, கார்ல்டன் தோட்டத்தில் நாய்க் குட்டியை மீள விட முயன்ற சமயத்திலேயே யுவதி கைதானார்.

வீரகெட்டிய பிரதேசசபையின் ஐ.தே.க. உறுப்பினர் ஒருவரின் மகளே கைதானார்.

திருடப்பட்ட நாய் அவரது பராமரிப்பில் இருந்த நிலையில், திருடப்பட்டவற்றை மீள ஒப்படைக்குமாறு பொலிஸார் விடுத்த அறிவித்தலின் பிரகாரம், நாயை மீள கார்ல்டன் தோட்டத்தில் விட யுவதி முயன்றிருக்கலாமென கருதப்படுகிறது. (அ)

# வல்வெட்டித்துறை மண்ணை வணங்கி ஆரம்பித்த முள்ளிவாய்க்கால் பேரணி!

வடமராட்சி, மே 17

**விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த ஊரான வல்வெட்டித்துறைப் பகுதியில் உள்ள அவரது பிறந்த வீட்டுக்கு முன்னால் விழுந்து வணங்கி நேற்று திங்கட்கிழமை முள்ளிவாய்க்கால் பேரணி ஆரம்பிக்கப்பட்டது.**



மே 18 இல் முள்ளிவாய்க்காலில் அப்பாவி தமிழ் மக்களைக் கொத்துக் கொத்தாக கொன்றொழித்த சிங்கள பேரினவாதத்தின் கறைபடிந்த நாளான முள்ளிவாய்க்கால் நினைவு வாரம் கடந்த 12ஆம் திகதி உணர்வுபூர்வமாக தமிழர் தாயகப் பகுதிகளில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் பிறந்த ஊரான வல்வெட்டித்துறையில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட பேரணியானது நடைபவனியாக பருத்தித்துறை, நெல்லியடி, அச்சுவேலி, நல்லூர் கந்தசாமி ஆலயம் யாழ் பல்கலைக்கழகம் ஊடாக யாழ் நகரத்தை வந்தடைய வுள்ளது.

பின்னர் யாழ். நகரத்திலிருந்து நாவற்குழி, கைதடி, சாவகச்சேரி, கொடிகாமம் ஊடாக கிளிநொச்சியை சென்றடைந்து அங்கிருந்து மே 18 திகதி புதன்கிழமை முள்ளிவாய்க்கால் நினைவிடத்தை சென்றடைய உள்ளது. (அ-02)

# கொட்டாஞ்சேனையில் நபரொருவர் படுகொலை!

கொழும்பு, மே 17

கொட்டாஞ்சேனை ஆர்மர் வீதி அடுக்குமாடி குடியிருப்புக்கு அருகில் ஒருவர் கத்தியால் குத்தி படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்த கொலை சம்பவம் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் ஆர்மர் வீதி அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் 42 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். கொலைக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளதுடன், அவரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கொட்டாஞ்சேனை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# சமையல் எரிவாயு உடனே விநியோகிக்க நடவடிக்கை

கொழும்பு, மே 17

சமையல் எரிவாயுவுக்கான கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தனது சமூக வலைத்தளப் பதிவில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இந்த சமையல் எரிவாயுக் களை தரையிறக்கி விநியோ கிக்க நடவடிக்கை எடுக்கப்படு வதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார். (அ)

# ஜனாதிபதி கோட்டாவுக்கு பதிலாக பி.பி.ஜெயசுந்தரவே ஆட்சி செய்தார்!

*அமைச்சரவையின் முன்னாள் செயலர் வெளியிட்ட தகவல்*

கொழும்பு, மே 17

கோட்டாபய ராஜபக்ஷ, ஜனாதிபதியாக செயற்பட்டாலும் பி.பி.ஜெயசுந்தரவே நாட்டை நிர்வகித்ததாக அமைச்சரவையின் முன்னாள் செயலாளர் எஸ். அமரசேகர தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகவியலாளர் ஒருவரின் நேர்காணலின்போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

தாம் 50 வருட அரச சேவை அனுபவத்தை கொண்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர், மஹிந்த ராஜபக்ஷவை தமக்கு பிடிக்கும் என்ற போதும், தாம் ராஜபக்ஷவாதி அல்லர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கோட்டபய ராஜபக்ச அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் முதலாவதாக மேற்கொள்ளப்பட்ட வரி குறைப்பு தொடர்பான யோசனையின்போது பி.பி.ஜெயசுந்தரவே, அதனை அவசரமாக நிறைவேற்றினார் என்று அமரசேகர தெரிவித்துள்ளார்.

இந்த வரி குறைப்பு காரணமாக அரசுக்கு 600 பில்லியன் ரூபாய்கள் நட்டமேற்பட்டதாக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில், தாம் அமைச்சரவைச் செயலாளராக இருந்த போதும், அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது இடையிலேயே பி.பி.ஜெயசுந்தரவினால் வரி குறைப்பு யோசனைக்கான ஆவணம் அவசரமாக கொண்டு வரப்பட்டது.

இதன்போது தாம், ஜனாதிபதி கோட்டாபயவிடம் சென்று இந்த யோசனை தொடர்பில் அமைச்சர்களின் ஆலோசனைகளை பெற்று அடுத்த வாரம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கலாம் என்று கூறியபோது அதற்கு ஜனாதிபதி உடன்பட்டார்.



எனினும் பி.பி.ஜெயசுந்தரவே, இது இந்த வாரமே அமைச்சரவையின் அனுமதி பெறப்படவேண்டும் என்று கூறி, அமைச்சரவையின் அனுமதியை பெற்றுக்கொண்டதாக அமரசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

பி.பி ஜெயசுந்தரவுக்கு நிதி சம்பந்தமான விடயங்கள் தெரியும் என்றபோதும், ஜனாதிபதியின் செயலாளர் என்ற அளவில் அவருக்கு நிர்வாக சேவையில் அனுபவம் இல்லை. அவர், தரகுப் பணம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்கு அதிக நாட்டம் காட்டாதபோதும், தமது அதிகாரத்தை அடுத்தவர்களுக்கு காட்டவேண்டும் என்பதில் விருப்பமுள்ளவர்.

அத்துடன் ராஜபக்ஷர்கள் எதனைக் கூறினாலும் அதனை உடனடியாக செய்துவிடவேண்டும் என்பதில் ஆர்வமாக இருப்பார். பி.பி.ஜெயசுந்தரவை, ஜனாதிபதியின் செயலாளராக நியமிப்பதற்கு பஸில் ராஜபக்ஷவே பரிந்துரையை செய்திருந்தார். ஏனெனில் பி.பியும் பஸிலும் நண்பர்களாவர் என்றும் அமரசேகர குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் கோட்டாபய அரசாங்கம் இன்றைய வீழ்ச்சி நிலைக்கு சென்றுள்ளமைக்கு 75 வீதமான பொறுப்புக்கூறவேண்டியவர் பி.பி. ஜெயசுந்தர என்று அமரசேகர தெரிவித்துள்ளார்.

சீனாவிடன் கடன் பெற்றமை, தவறான காரியம் அல்ல என்று குறிப்பிட்ட அவர், பாதையமைப்பு தொடர்பாக ஒப்பந்தக்காரர்களுடன் கலந்துரையாடல்களை நடத்தும்போது அது தொடர்பில் அனுபவம் வாய்ந்தவர்கள் இருக்கவில்லை என்று தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவை இன்றைய கீழ் நிலைக்கு கொண்டு வந்தமைக்கு அவருடைய குடும்பமே காரணமாகும். மஹிந்த பணத்துக்கு ஆசைப்பட்டவர் அல்லர் என்றும் அமரசேகர தெரிவித்துள்ளார்.

பஸில் ராஜபக்ஷ எப்போதும் பணம் தேடுவதில் விருப்பமுள்ளவர் என்று கூறிய அமரசேர, அவருக்காகவே பி.பி.ஜெயசுந்தர செயற்பட்டிருக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய நிலையில் ராஜபக்ஷர்களின் அரசியலை அடுத்த பரம்பரைக்கு கொண்டு செல்லமுடியாத நிலை ஏற்பட்டுள்ளாதாகவும் அமரசேகர தெரிவித்துள்ளார்.

தம்மை தென்னாபிரிக்காவுக்கான தூதுவராக நியமித்தபோதும், உரிய காலம் முடிவடைவதற்கு முன்னரே, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் கொலம்பகேயினால், தமது சேவைக்காலம் முடிவடைந்துவிட்டதாக கடிதம் அனுப்பப்பட்டது.

எனினும் அது ஜனாதிபதியின் பணிப்புரைக்கு ஏற்ப அல்லாமல் கொலம்பகேயின் விருப்பப்படியே அனுப்பப்பட்டதாக தமக்கு தெரிந்தது என்று அமரசேகர தெரிவித்துள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ, மஹிந்த ராஜபக்ஷவின் கீழ் இருந்து சிறப்பாக சேவையாற்றியபோதும் அவரால், தனித்து நின்று தீர்மானங்களை எடுக்கக் கூடிய நிர்வாகத்திறமை இல்லை.

இந்தநிலையில் போரை வெற்றிகொண்டது சரத் பொன்சேகா என்று குறிப்பிட்ட அமரசேகர, அதற்கு தலைமைத்துவத்தை கோட்டாபய வழங்கினார் என்றும் தெரிவித்துள்ளார். (அ)

# தென்னிலங்கையில் கைதானோர் எண்ணிக்கை 398 ஆக அதிகரிப்பு!

கொழும்பு, மே 17

நாடளாவிய ரீதியில் நபர்களைத் தாக்கி பொது மற்றும் தனியார் சொத்துக்களுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் தென்னிலங்கையில் மேலும் 159 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேகநபர்கள் நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக இடம்பெற்ற கலவரம் தொடர்பில் இதுவரை 398 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் 159 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதாக நிஹால் தல்துவ கூறினார். (அ)

# பாராளுமன்ற உறுப்பினர் வீட்டுக்கு தீ வைத்த குற்றச்சாட்டில் கைதான பிக்குவுக்கு பிணை!

கொழும்பு, மே 17

லோலுவாகொடவில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் கோகிலா குணவர்தனவின் வீட்டுக்கும், அவரது சகோதரரின் வீட்டுக்கும் தீ வைத்து சேதம் விளைவித்த சம்பவம் தொடர்பில் கைதான அத்துபொடே தம்ம கிட்டி தேரரை தலா ஒரு இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீரப் பிணைகளில் விடுவிக்குமாறு அத்தனகல்ல பதில் நீதவான் ஜயசேகர ரணசிங்க பிரேமதாஸ உத்தரவிட்டுள்ளார்.

லோலுவாகொடவில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் கோகிலா குணவர்தன மற்றும் அவரது சகோதரரின் வீட்டுக்கு கடந்த 9ஆம் திகதி இரவு தீவைக்கப்பட்டதாக கூறப்படும் தீவைப்பு சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார் விகாராதிபதியை கைது செய்துள்ளனர்.

சந்தேகநபரை நீதிமன்றில் ஆஜர்படுத்திய நல்ல பொலிஸ் பிரிவின் பிரதான பொலிஸ் பரிசோதகர் காஞ்சன சமரக்கோன், கடந்த 9ஆம் திகதி இரவு பெருமளவான மக்கள் லோலுவாகொடவில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் கோகிலா குணவர்தனவின் வீட்டுக்கும் அவரது சகோதரரின் வீட்டுக்கும் தீ வைத்ததாக தெரிவித்தார்.

அதை அடக்க பொலிஸார் பெரும் முயற்சியை எடுத்ததாக அவர் குறிப்பிட்டார்.

அந்த இடத்தில் ஏராளமானோர் குவிந்திருந்தனர். சம்பவ இடத்தில் விகாராதிபதியும் பிரசன்னமாகியிருந்தார். தீவைப்பை தடுத்து நிறுத்த வந்ததாக விகாராதிபதி கூறியிருந்தார். ஆனால் பின்னர் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில், தாக்குதல் சம்பவத்துக்கு குழுவை வழிநடத்தியதற்காக சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் பரிசோதகர் தெரிவித்தார்.

விகாராதிபதி சார்பில் ஆஜரான சட்டத்தரணி, சம்பவ இடத்திற்கு வந்த விகாராதிபதியே நிலைமையை கட்டுப்படுத்த முயன்றதாகவும், பொலிஸார் பொய்யான தகவலை தெரிவிப்பதாகவும் குறிப்பிட்டார். (அ)

# கோட்டா பதவியில் தொடருவாரா? அல்லது ரணில் ஜனாதிபதியாவாரா?

**பனங்காட்டான்**



**மா**ற்றம் ஒன்றே மாற்றமில்லாதது என்பது எல்லாவற்றுக்கும் இணக்கமான ஒரு பொது வாக்கு. இலங்கை அரசியலில் இப்போது அந்த மாற்றம் நிகழ்கிறது. கடந்த வாரத்து இந்தப் பத்தியின் இறுதியில். அடுத்து வரும் நாட்களும் வாரங்களும் எல்லாவற்றையும் வெளிப்படுத்தலாம் என்று சுட்டியவாறு. எதிர்பார்த்த - எதிர்பாராத பல மாற்றங்கள் இப்போது அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. இது ஒரு தொடர்கதையாகப் போகிறது.

2019 இறுதியில் இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 69 லட்சம் சிங்கள மக்களின் வாக்குகளால் மகுடம் சூட்டப்பட்டவர் கோட்டாபய. அவரது பதவிக்காலத்தின் அரைப்பகுதிக்குள்ளேயே அதே மக்கள் அவரை வீட்டுக்குப் போ என்று கோசமிடுவார்கள் என யாரும் கற்பனை பண்ணியிருக்க மாட்டார்கள்.

2020 நடுப்பகுதியில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்து பிரதமர் கதிரையில் ஏறிய மகிந்த, ஒரு வருடமும் ஒன்பது மாதங்களும் மட்டுமே பதவியில் இருந்த நிலையில், பதவி துறந்து ராணுவப் பாதுகாப்புடன் உலங்குவானூர்தியில் தப்பியோட நேருமென எவரும் கனவு கூடக் கண்டிருக்க மாட்டார்கள்.

ராஜபக்ச குடும்பம் என பெருவிருட்சமாக இருந்த ஆட்சியின் வேர்கள் அறுக்கப்பட்டு, இப்போது இழுபட்ட ஒற்றை வேரில் நிற்பவர் ராணுவ வழிவந்த கோட்டாபய மட்டுமே. எரிபொருள் தட்டுப்பாடு, உரத் தட்டுப்பாடு, உணவுப் பொருட்கள் விலையேற்றம், பொருளாதாரப் பாதிப்பு, பணவீக்கம் என்பவற்றுக்கு அப்பால், ஒரு குடும்பமும் அதைச் சுற்றி இருந்தவர்களும் மேற்கொண்ட ஊழல், மோசடி, திருட்டு, கொள்ளை என்பவற்றால் பாதிப்புற்ற மக்கள் தன்னெழுச்சி கொண்டதால் நாடு முடக்க நிலை கண்டது.

கோட்டா வீட்டுக்குப் போ, மகிந்த வீட்டுக்குப் போ என்ற பேரெழுச்சியின் பயனாக திடுதிப்பென எதிர்பாராத மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதற்கான மைய இடமாக காலிமுகத் திடலும் (கோட்டா கம), அலரி மாளிகை முன்றலும் (மைனா கம) மாறின. வன்செயல்கள் எதற்கும் இடங்கொடாத வகையில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தை, காலத்தை இழுத்தடிப்பதால் களைத்துவிடச் செய்யலாமென ராஜபக்சக்கள் எண்ணினர். அதற்கேற்ப காய்களையும் நகர்த்தினர்.

இதற்கு ஏதுவாக தங்களுக்கு இயைவான ஊடகங்களில் சில செய்திகளை இவர்கள் பரவ விட்டனர். மகிந்தவைப் பதவியில் இருந்து கோட்டா நீக்குவார், கோட்டா பதவி விலக மாட்டார், விரும்பினால் கோதா அவரை நீக்கலாம் என்பவற்றோடு - எனது அண்ணனை நான் வெளியேற்ற மாட்டேன் என கோட்டா அறிவித்தது போலவும் செய்திகள் வந்தன.

இவை எதனையும் செவி சாய்க்காது, பொய்யுக்கும் புரட்டுக்கும் எல்லை உண்டு என்பதை உணர வைக்கும் வகையில், ராஜபக்சர்களுக்கு எதிரான போராட்டம் திருப்பு முனைக்கு வந்தது. கோட்டா வீட்டுக்குப் போ என்று ஆரம்பித்த போராட்டத்தை லாவகமாக தமது அண்ணன் மகிந்த பக்கம் திருப்பி விட்டார் கோட்டாபய. கோட்டாவின் கோரிக்கையை (இதனை உத்தரவு என்றுதான் சொல்ல வேண்டும்) ஏற்று மகிந்த பிரதமர் பதவியை துறக்கும் நிலை உருவானது.




இதனால் ஏற்படப்போகும் அரசியல் நெருக்கடிகளையும், உருவாகக்கூடிய களேபரத்தையும் எதிர்பார்த்து மே மாதம் 7ம் திகதி மீண்டும் அவசரகால நிலையை கோட்டாபய அறிவித்து, பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தை வர்த்தமானி ஊடாக பிரகடனம் செய்தார். பொதுமக்களைப் பாதுகாக்க வேண்டிய கட்டளைச் சட்டம், ஆட்சித் தரப்பினரை பாதுகாக்க பிரகடனமாகியது விந்தையானது.

மே மாதம் 9ம் திகதியன்று தமது பதவியை மகிந்த ராஜபக்ச ராஜினாமா செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. அதற்கு முதல் இரவு பல பேருந்துகளில் ஆயிரக் கணக்கான அவரின் ஆதரவாளர்கள் அலரி மாளிகைக்கு அழைக்கப்பட்டு அவர்களுக்கான பணி என்னவென தெரிவிக்கப்பட்டது.

மாறிவரும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி ராணுவ ஆட்சியை கோட்டா ஏற்படுத்துவாரா? நெருக்கடியை சமாளிக்க முடியாது சில மாதங்களில் ஜனாதிபதி பதவியைத் துறந்து நாட்டை விட்டு கோட்டா ஓடுவாரா? திடுதிப்பென பிரதமராக வந்தது போன்று ஜனாதிபதி ஆகும் வாய்ப்பும் ரணிலுக்குக் கிடைக்குமா? அப்படியென்றால், கோட்டா கம போராட்டம் எவ்வாறு மாற்றம் எடுக்கும்? முள்ளிவாய்க்கால் வாரத்தில் இக்கேள்விகள் மனதைத் துளைப்பதை தடுக்க முடியவில்லை.

ஒரு மாதத்துக்கும் மேலாக மிகமிக அவதானமாக - நாடி வந்த நெருக்கடிகளையும் வன்செயல் புகாதவாறு போராட்டத்தை மேற்கொண்டவர்கள் மீது மகிந்தவின் குண்டர்கள் தாக்குதல் நடத்தினர். காவலுக்கு நின்ற பொலிஸார் தாக்குதல்களை தடுக்காது வேடிக்கை பார்த்து நின்றனர். இதுவும் பிரதமர் அலுவலகத்தின் உத்தரவுதான்.

இதன் தொடர் நிகழ்வுகள் அடுத்த நாற்பத்தெட்டு மணித்தியாலங்கள் நாட்டை அல்லோலகல்லோலப் படுத்தியது. தங்கள் மீது ஏவப்பட்ட அரச வன்முறையை தடுப்பதற்கு போராட்டக்காரர்கள் தயாராக இல்லாத நிலையிலும் முடிந்தவரை தடுப்பு முயற்சிகளை மேற்கொண்டார்கள். வெகுஜன எழுச்சியால் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட ஒன்பது உயிர்கள் காவு கொள்ளப்பட்டன. நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களின் வீடுகள், அவர்களுக்குச் சொந்தமான வணிக நிறுவனங்கள் தீமூட்டி எரிக்கப்பட்டன. பல கட்டிடங்கள் சேதமாக்கப்பட்டன.

தங்காலையிலுள்ள ராஜபக்சக்களின் பூர்வீக இல்லம் எரியூட்டப்பட்டது. இவர்களது தந்தை டி.ஏ.ராஜபக்சவின் சிலை தகர்க்கப்பட்டது. ஊரடங்குச் சட்டத்தால் எதனையும் தடுக்க முடியவில்லை. பதவி துறந்து ஓடித் தப்புவதற்கு முன்னர், தமது தம்பியான கோட்டாபயவுக்கு மகிந்த வழங்கிச் சென்ற நினைவுப் பரிசு திட்டமிட்ட வன்செயல். இதனை கோட்டாபய எதிர்பார்த்திருக்க வில்லையென அவருடைய நெருங்கிய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

வன்செயலுக்குத் தூபமிட்டு அதனை ஆரம்பித்து வைத்தவர் தமது அண்ணரான மகிந்த என்பதை நன்கு தெரிந்த கொண்ட கோதா, 11ம் திகதி இரவு நாட்டுமக்களுக்கு ஆற்றிய உரையில் முக்கியமான ஒரு விடயத்தைக் குறிப்பிட்டார் - இந்த நிகழ்வுகளுக்கு வழிவகுத்த முதலா வது சம்பவத்தை பாரபட்சமின்றி தான் கண்டிப்பதாகக் குறிப்பிட்டதோடு, இது தொடர்பில் பூரண விசாரணைக்கு தாம் உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்த விசாரணை எப்போது முடிவடையும், குற்ற வாளிகள் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்பவற்றுக்கு அப்பால், இந்த வன்செயல்களுக்கான திட்டம் அலரி மாளிகையில் மகிந்த தலைமையில் தீட்டப்பட்டது என்பதை கோட்டா பகிரங்கமாகக் குறிப்பிட்டுள்ளதை இங்கு கவனிக்கலாம்.

நான்கு தடவைகள் பிரதமராக (ஒரு தடவை கூட முழுமையான பதவிக்காலத்தில் இருக்கவில்லை) இருந்த மகிந்த, கம்பராமாயணத்தில் கவிச்சக்கரவர்த்தி குறிப்பிட்டது போல, "யாவும் இக்களத்தே விட்டு வெறுங்கையோடு...." அலரி மாளிகையிலிருந்து தப்பியோட நேர்ந்தது, இறுதிக்காலம்வரை அவர் நெஞ்சில் வெந்து கொண்டிருக்கும் நிகழ்வு.

முன்னாள் ஜனாதிபதி என்ற வகையில் மகிந்தவுக்கு பூரண பாதுகாப்பு வழங்க வேண்டிய கடப்பாடு அரசுக்கு உண்டென்றும், திருமலை கடற்படை முகாமில் அவரும் அவரது குடும்பத்தினரும் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருப்பதாகவும் பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ன தெரிவித்துள்ளார்.

தமிழீழத்தை அழித்தொழிப்பதில் தீவிரமாக இருந்த மகிந்தவுக்கு தமிழீழத்தில்தான் பாதுகாப்பு கொடுக்கப்படுகிறது. அந்த இடத்தைத் தெரிவு செய்தவர் தமிழினப் படுகொலையின் சூத்திரதாரியான கோட்டா. இவை வரலாற்றுக்குரிய தகவல்கள்.

மகாசங்கத்தினரின் விருப்புக்கு ஏற்றவாறு இடைக்கால நிர்வாகத்துக்கு பிரதமராக வருபவர்களென மூவரின் பெயர்கள் கூறப்பட்டன. ஆனால், அவர்கள் அனைவரையும் பின்தள்ளிவிட்டு ரணிலை பிரதமராக கோட்டா நியமித்துள்ளார். மகிந்த பதவி துறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்னரே ரணிலின் சம்மதத்தை கோட்டா பெற்ற தகவலும் இப்போது தெரிய வந்துள்ளது.

ரணிலும் ஏற்கனவே ஐந்து தடவைகள் பிரதமராக இருந்தவர். மகிந்த போன்று ஒரு தடவையும் முழுமையாக அப்பதவியில் அவர் இருக்கவில்லை. இப்போது ஆறாவது தடவையாக பிரதமராகியுள்ளார். இதுவும் ஆறு மாதங்களுக்கு மட்டுமே உரியது. இக்காலத்தில் அவர் செய்து முடிக்க வேண்டிய பணிகள் வரையறுக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்றத்துக்கு அதிகாரங்களை வழங்கவும், ஜனாதிபதியின் அதிகாரங்களை மட்டுப்படுத்தவும் அரசியல் சட்ட நடவடிக்கைகளை அவர் நிறைவு செய்ய வேண்டும்.

இவர் தலைமையிலான நிர்வாகத்துக்கு தற்காலிக ஒருமைப்பாட்டு அரசாங்கம் என்று பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. ஆறு மாத காலத்துக்குள் இதில் சம்பந்தப்படும் எவரும் குழப்பியடிக்கக் கூடாது. அதேசமயம் மக்களை மையப்படுத்திய புதிய அரசியல் யாப்புக்கு மக்களின் அங்கீகாரத்தைப் பெறும் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். இந்த நடைமுறைகளை ரணில் அமுல்படுத்த வேண்டுமென திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கும் போராட்டக்காரர்கள், குறிப்பிட்ட ஆறு மாதங்களும் கோட்டா கமவில் மக்கள் போராட்டம் தொடரும் எனவும் சுட்டியுள்ளனர்.

இதனை ஏற்பது போன்று ரணில் தமது புதிய முதலாவது அறிவிப்பில் கோட்டா கமவில் மக்கள் போராட்டம் தொடர்ந்து இடம்பெறும் எனவும், பொலிஸார் இதற்குத் தடையாக இருக்கக்கூடாது எனவும் தெரிவித்திருப்பது பலரதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

(09 ஆம் பக்கம் பார்க்க...)

## முள்ளிவாய்க்கால் ஆண்டு தினத்தில் தாக்குதலா?

# இந்திய நாளிதழ் செய்தியால் இலங்கையில் உஷார்நிலை!

முள்ளிவாய்க்கால் நினைவு தினத்தை முன்னிட்டு விடுதலைப்புலிகள் இயக்கத்தில் முன்பு இருந்தவர்கள் ஒரு குழுவாக சேர்ந்து இலங்கையில் தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக இந்திய உளவுத்துறை வட்டாரங்களை மேற்கோள்காட்டி இந்திய நாளிதழான தி இந்து வெளியிட்ட செய்தியைத் தொடர்ந்து முழு எச்சரிக்கையுடன் இருப்பதாகக் கூறியிருக்கிறது இலங்கை பாதுகாப்பு அமைச்சகம்.




இலங்கையில் மே மாதம் 18ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தில் முன்பு இருந்தவர்கள் குழுவாகச் சேர்ந்து தாக்குதல் நடத்த திட்டமிட்டுள்ளதாக இந்திய உளவுத் துறையை மேற்கோள்காட்டி, தி இந்து நாளிதழ் கடந்த 13ஆம் திகதி செய்தி வெளியிட்டிருந்தது. இந்த விடயம் தொடர்பில் இலங்கை புலனாய்வு துறையினர், இந்திய புலனாய்வு துறையிடம் விடயங்களை ஆராய்ந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவிக்கின்றது.

இது குறித்து இலங்கை பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்து நாளிதழ் வெளியிட்டுள்ள செய்தியைத் தொடர்ந்து சாதாரணமான ஒன்றுதான் என இந்திய உளவுத்துறை, இலங்கை புலனாய்வு துறையிடம் கூறியுள்ளதாக இலங்கை பாதுகாப்பு அமைச்சகம் செய்திக்குறிப்பு மூலம் தெளிவுபடுத்தியுள்ளது. எனினும், இந்த தகவல் தொடர்பாக விரிவாக விசாரணை நடத்தி எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறித்து இலங்கையிடம் தெரிவிப்பதாக இந்திய உளவுத்துறை கூறியுள்ளது என்று இலங்கை பாதுகாப்பு அமைச்சகம் குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், இந்த தகவல்கள் மற்றும் தேசிய பாதுகாப்பு குறித்து உளவு அமைப்பு மற்றும் இலங்கை பாதுகாப்புப் படைகளுக்கு கிடைக்கும் எல்லா தகவல்களும் முறையாக விசாரிக்கப்பட்டு உரிய பாதுகாப்புப் படைகளுக்கு தெரிவிக்கப்படும் என்று இலங்கை பாதுகாப்பு அமைச்சகம் செய்திக்குறிப்பில் கூறியுள்ளது.

இலங்கை பாதுகாப்பு அமைச்சகத்தின் இந்த செய்திக் குறிப்பு பற்றி இந்திய உள்துறை அமைச்சக உயரதிகாரியிடம் பேசியபோது, “இலங்கையில் தற்போது நீடித்து வரும் நெருக்கடி மற்றும் மக்கள் போராட்ட எழுச்சி தொடர்பாக ஏற்கெனவே தமிழ்நாடு காவல்துறையின் உளவுப்பிரிவுக்கும் சென்னையில் உள்ள உளவுத்துறை அலுவலகத்துக்கும் எச்சரிக்கை குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாகவே உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்த வாரத்தை குறிக்கும் நிகழ்வுகளின்போது அசம்பாவிதம் நிகழலாம் என்பதால் எச்சரிக்கையுடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது,” என்று கூறினார்.

### ஆங்கில நாளிதழ் செய்தியில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தது?

நாடு ஆழமான பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியில் சிக்கியுள்ள நிலையில், தடை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்கள் மீண்டும் இலங்கையில் தாக்குதல்களை நடத்தத் தயாராகி வருவதாக உளவு அமைப்புகள் எச்சரித்துள்ளன என்று தி இந்து நாளிதழ் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

அதில், தீவிரமான வன்முறைப் போராட்டங்களுக்கு மத்தியில் தீவு நாடு இரண்டு முறை அவசரநிலையை அறிவித்த நிலையில், பன்னாட்டுத் தொடர்புகளைக் கொண்ட இலங்கைத் தமிழ் புலம்பெயர்ந்தோரில் சில பிரிவினர், போராட்டக்காரர்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்கும் இடையே நடந்து வரும் மோதல்களில் தங்கள் இருப்பை “உணர்த்த” முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக காவல்துறை வட்டாரங்கள் வெள்ளிக்கிழமை தெரிவித்தன,” என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவு தினமான மே 18ஆம் தேதி, சில குழுக்கள் தமிழ் இனப்படுகொலை நினைவு தினமாக அனுசரிக்க தாக்குதல்களை திட்டமிடுவது மட்டுமின்றி, தங்களின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், செய்தி வாசிப்பாளர் இசைப்பிரியா மற்றும் பலர் கொல்லப்பட்டதற்கு பழிவாங்கவும் முன்னாள் புலிகள் சதித்திட்டம் தீட்டியதாக தி இந்து நாளிதழ் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

உளவுத்துறை உள்ளீடுகளை மேற்கோள்காட்டும் வட்டாரங்கள், இலங்கையில் தங்களுடைய திட்டங்களை செயல்படுத்துவதற்காக முன்னாள் எல்டிடிஈ உறுப்பினர் தமிழ்நாட்டிற்குள் நுழைந்துள்ளதாகவும் இதை கருத்தில் கொண்டு கடலோர மாவட்டங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட மாநில உளவுத்துறை மற்றும் உள்ளூர் காவல்துறையின் சிறப்புப் படையினர் மாநிலத்தில் சுமார் 1,000 கி.மீ தூரத்துக்கு கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். தமிழ்நாடு காவல்துறையின் கடலோர பாதுகாப்பு குழுமமும் கடல் எல்லையில் ரோந்துப் பணியை அதிகப்படுத்தியுள்ளது என்றும் அந்த ஆங்கில நாளிதழ் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### இந்திய மீனவர்களுக்கு அறிவுரை

இதேவேளை, கடலுக்குச் செல்லும் இந்திய மீனவர்களுக்கு தற்போதைய சூழலின் ஆபத்து குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டதுடன், ஆழ்கடலிலும், சர்வதேச கடல் எல்லை பகுதியிலும் சந்தேகத்திற்கிடமான நடமாட்டங்கள் தெரிந்தால் அது குறித்து உளவுத்துறையினர், கடலோர காவல் படையினர் அல்லது மாநில காவல் துறையிடம் தகவல் தெரிவிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டின் கடலோர மாவட்டங்களில் உள்ள காவல்துறை கண்காணிப்பாளர்கள், தங்களுடைய எல்லை வரம்புக்கு உட்பட்ட பகுதியில் கண்காணிப்பு மற்றும் கடலுக்குச் செல்லும் அனைத்து வீதிகளிலும் வாகனச் சோதனையை தீவிரப்படுத்துவதற்காக அனைத்து கடலோர மாவட்டங்களின் பொலிஸ் அத்தியட்சகர்களும் சோதனைச் சாவடிகளை பலப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். “தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுதாபிகள் அல்லது அதன் முன்னாள் செயல்பாட்டாளர்களின் நடமாட்டங்களை சமீப வருடங்களாக தமிழ்நாடு கவனித்து வருகிறது. கடந்த ஆண்டு, இந்தியாவில் பயங்கரவாத வழக்குகளை விசாரிக்கும் பிரத்யேக அமைப்பான என்ஐஏ எனப்படும் தேசிய புலனாய்வு முகமை, சர்வதேச




தொடர்புகளுடன் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் புலிகளின் முன்னாள் உளவுப்பிரிவின் செயல்பாட்டாளரான சபேசன் என்ற சத்குணம் என்பவரை கைது செய்தது. அவர் இலங்கையில் விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு புத்துயிர் அளிக்க நிதி திரட்டியதாக குற்றம்சாட்டப்பட்டது. மற்றொரு வழக்கில், செயலற்ற வங்கிக் கணக்கில் கிடக்கும் பெரும் தொகையை மோசடியான முறையில் எடுக்க மும்பை சென்ற பெண் ஒருவர் சென்னை விமான நிலையத்தில் கைது செய்யப்பட்டார். விசாரணையில், இலங்கையில் விடுதலைப் புலிகளின் மறுமலர்ச்சிக்காக நிதி திரட்டும் பணிக்காக அவர் நியமிக்கப்பட்டுள்ளார் என்று புலனாய்வுத்துறை வட்டாரங்கள் தெரிவித்தன,” என்று தி இந்து நாளிதழ் செய்தி குறிப்பிட்டிருந்தது. **[பிபிசி]**

---

# கோட்டா பதவியில்....

(08 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை அரசியலில் கிழட்டு நரி எனப் பெயர் பெற்ற ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் பெறாமகன் ரணில் விக்கிரமசிங்க. அதாவது - ஜே.ஆரின் தாயாரும், ரணிலின் தாயாரின் தந்தையான லேக் ஹவுஸ் நிறுவனர் டி.ஆர். விஜேவர்த்தனவும் கூடப் பிறந்த சகோதரர்கள்.

1977ம் ஆண்டுத் தேர்தலில் முதல் முறையாக நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவான ரணில் கடந்த நாற்பத்தைந்து வருடங்களாக நாடாளுமன்ற உறுப்பினராக இருந்து வருகிறார். தமது அரசியல் வாரிசாக ரணிலை வளர்த்து வந்த ஜே.ஆரின் குள்ளத் தனங்கள் அனைத்தும் ரணிலிடம் உண்டு.

அதேசமயம், சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்ற இலங்கையின் பிரபல்யமான அரசியல் தலைவராக மதிக்கப்படுவது ரணிலுக்குக் கிடைத்த பிளஸ் பொயின்ற். இவரை பல உலக நாடுகள் ஆட்சி மாற்றத்துக்குரியவராக கணிப்பது, இப்போதைய நிலையில் இலங்கைக்கு பொரு ளாதார மீட்சியை ஏற்படுத்த இவருக்கு வாய்ப்பாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த பொதுத் தேர்தலில் இவரது ஐக்கிய தேசியக்கட்சியிலிருந்து எவருமே தெரிவாகவில்லை. முதல்முறையாக ரணில் படுதோல்வி கண்டார். ஆனால், இக்கட்சிக்குக் கிடைத்த மொத்த வாக்குகளின் அடிப்படையில், தேசியப் பட்டியலூடாக எம்.பி. யானார்.

இதுவரை காலமும் ராசியில்லாத ராஜாவாக இருந்த ரணிலுக்கு இப்போது கிடைத்துள்ள பிரதமர் பதவி ராசியானதா இல்லையா என்பதை அறிய சில மாதங்கள் பொறுத்திருக்க வேண்டும். கட்சி மாறுவதில் பெயர் பெற்ற பல எம்.பிக்கள் மந்திரி ஆசையில் இவரது கூட்டில் பாய தயாராகிறார்கள். மறுபுறத்தில் கோட்டாய வீட்டுக்குப் போ என்னும் போராட்டம் கோட்டா கமவில் தொடர்ந்து கொண்டே இருக்கப் போகிறது.

கரணம் தப்பினால் மரணம் என்னும் அடுத்த ஆறு மாதங்கள் என்பது ஆழ்கடலில் சுழியோடுவது போன்றது. இவ்வேளை பொதுவாகப் பலர் மனதிலும் எழும் கேள்விகள் சிலவுண்டு.

சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ராணுவ ஆட்சியை கோட்டா ஏற்படுத்துவாரா? நெருக்கடியை சமாளிக்க முடியாது சில மாதங்களில் ஜனாதிபதி பதவியைத் துறந்து நாட்டை விட்டு கோட்டா ஓடுவாரா? தேர்தல் இன்றியே பிரதமராக வந்தது போன்று ஜனாதிபதி ஆகும் வாய்ப்பு ரணிலுக்குக் கிடைக்குமா? கோட்டா கம போராட்டம் எவ்வாறு மாற்றம் எடுக்கும்?

முள்ளிவாய்க்கால் வாரத்தில் இக்கேள்விகள் மனதைத் துளைப்பதை தடுக்க முடியவில்லை.

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

**06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

i) நான் ........................................ (ஆவணி, ஆவனி) மாதம் பிறந்தேன்.

ii) தேசியக்கொடியில் .................................... (வால், வாழ், வாள்) ஏந்திய சிங்கம் ஒன்று உண்டு.

ii) நாங்கள் .................................................... (சுற்றுலா, சுற்றுளா, சுற்றுழா) விற்காகக் கண்டிக்குச் சென்றோம்.

(3 புள்ளிகள்)

**07) பின்வரும் பழமொழிகளைப் பூர்த்தி செய்க.**

i) ஆற்றிலே போட்டாலும் ........................................................................

ii) ........................................................ குறுகுறுக்கும். (2 புள்ளிகள்)

**08) கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக.**

i) பலா கன்று போல பயிர் : ...........................................................

ii) தென்னை ஓலை போல மூங்கில் : .................................................... (2 புள்ளிகள்)

**09) பின்வரும் வாக்கியத்திற்குரிய இரட்டைக்கிளவியை இட்டு பூரணப்படுத்துக.**

i) தம்பி தண்ணீரை ............................... (கட கட, மட மட) வெனக் குடித்தான்.

ii) காலையில் சூரியன் ................................. (தகதக, குளுகுளு) வென பிரகாசித்தது.

(2 புள்ளிகள்)

**10) தனிச்சொல்லை எழுதுக.**


i) வீண் செலவு செய்பவன் : ..............................................................


ii) விமானத்தைச் செலுத்துபவன் : .................................................... (2 புள்ளிகள்)

**11) கீழே தரப்பட்ட ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) Bread : ............................ ii) Cloud : ............................ (2 புள்ளிகள்)

**12) தரப்பட்ட ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலே எழுதுக.**

i)  ..................................

ii)  ..................................

(2 புள்ளிகள்)

**13) பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

i) do / like? / What / you : ...........................................................................

ii) old / How / you? / are : ........................................................................................ (2 புள்ளிகள்)

**14) பின்வரும் சிங்களச் சொற்களுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.**

i) ரோஹல : ..............................................................

ii) தொளஹ : ........................................................ (02 புள்ளிகள்)

**15) பின்வரும் வாக்கியங்கள் சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.**

i) சோறு சாப்பிடுங்கள் : ..........................................................................

ii) அங்கே பாருங்கள் : .......................................................................... (02 புள்ளிகள்)

❖ **விடை எழுதுக.**

**16)** | 7 | 8 | 3 | 0 | இந்த நான்கு எண்ணட்டைகளாலும் உருவாக்கக்கூடிய மிகப் பெரிய எண்ணை எழுதுக.

..............................................................

**17)** ஏழாயிரத்து முந்நூற்று ஒன்பது என்ற எண்ணை நியம முறையில் இலக்கத்தில் எழுதுக.

..........................................................................

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| **06.** | 1) ஆவணி | 2) வாள் | 3) சுற்றுலா |
| **07.** | 1) அளவறிந்து போடு | 2) குற்றமுள்ள நெஞ்சு | |
| **08.** | 1) நாற்று | 2) தாள் | |
| **09.** | 1) மடமட | 2) தக தக | |
| **10.** | 1) ஊதாரி | 2) விமானி / வலவன் | |
| **11.** | 1) பாண் | 2) முகில் | |
| **12.** | 1) Star | 2) Table | |
| **13.** | 1) What do you like? | 2) How old are you? | |
| **14.** | 1) வைத்தியசாலை | 2) பன்னிரண்டு | |
| **15.** | 1) பத் கன்ன | 2) எத்தன பலன்ன / எஹே பலன்ன /அத்தன பலன்ன | |
| **16.** | 8 730 | **17.** 7 309 | |

### கல்வி tv CHANNEL-1

**17.05.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | விஞ்ஞானம் |
| 08.15 | தரம்-10 | விஞ்ஞானம் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | ICT |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast உயிரியல் |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு உயிரியல் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | தமிழ் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | English |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | ICT |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | விஞ்ஞானம் |

### கல்வி tv CHANNEL - 2

**17.05.2022**
**செவ்வாய்க்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-02 | கணிதம் |
| 09.45 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | தரம்-03 | தமிழ் |
| 11.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-04 | தமிழ் |
| 01.15 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-05 | தமிழ் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoon |
| 05.15 | தரம்-02 | கணிதம் |
| 06.00 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 06.45 | தரம்-03 | தமிழ் |
| 07.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 08.15 | தரம்-04 | தமிழ் |
| 09.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-05 | தமிழ் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சுற்றாடற்கல்வி |
| 12.30 | தரம்-03 | தமிழ் |
| 01.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.00 | தரம்-04 | தமிழ் |
| 02.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 03.30 | தரம்-05 | தமிழ் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# இரத்த தான முகாம்!

மட்டக்களப்பு, மே 17

மட்டக்களப்பு - கோட்டைமுனை விளையாட்டு கழகத்தின் வருடாந்த இரத்ததான முகாம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வு தாண்டவன்வெளி பேடினன்ஸ் மண்டபத்தில், விளையாட்டு கழகத்தின் தலைவர் பே. சடாற்சரராஜா தலைமையில் காலை 9 மணி தொடக்கம் பி.ப 2 மணி வரை நடைபெறவுள்ளது.

தற்போது மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் இரத்த தட்டுப்பாடு அதிகரித்துக் காணப்படுவதனால், அதிகளவிலான கொடையாளிகளை இந்த குருதிக் கொடை முகாமில் பங்கேற்று குருதி வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# மோட்டார் சைக்கிள் திருட்டு

மூதூர், மே. 17

மூதூர்-தோப்பூர் பிரதேசத்தில் வீட்டில் வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளைக் கும்பலொன்று திருடிச்சென்றுள்ளது.

இவ்வாறு திருடிய மோட்டார் சைக்கிளில், இரு ரயர்களையும் எடுத்துச் சென்றுள்ளதோடு மோட்டார் சைக்கிளைக் குளத்தை அண்டிய பகுதியில் திருடர்கள் கைவிட்டுச் சென்ற சம்பவம் நேற்று முன் தினம் இடம்பெற்றுள்ளது.

மூதூர் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அரச ஊழியர் ஒருவரின் மோட்டார் சைக்கிளையே, இவ்வாறு திருடர்கள் களவாடிச் சென்றுள்ளனர்.

அண்மைக்காலமாக தோப்பூர் பிரதேசத்தில் சைக்கிள்கள் அதிகளவில் திருடப்படுகின்ற நிலையில், சில மாதங்களுக்கு முன்பு மோட்டார் சைக்கிளின் பெற்றோல் தாங்கி களவாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இத்திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் இதுவரை யாரும் கைது செய்யப்படாத நிலையில், இத்திருட்டுச் சம்பவம் தொடர்பில் மூதூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)

# நூல் அறிமுக நிகழ்வு



திருமலை, மே. 17

ஊடகவியலாளர் பைஷல் இஸ்மாயில் தொகுத்த “நோயும் தீர்வும்” என்ற நூல் அறிமுக நிகழ்வு திருகோணமலையில் நேற்று இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்துகொண்ட கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் சாமஸ்ரீ தேசகீர்த்தி (திருமதி) ஜே.ஜே.முரளிதரனிடம் “நோயும் தீர்வும்” என்ற நூலின் பிரதியை தொகுப்பாசிரியரும், ஊடகவியலாளருமான பைஷல் இஸ்மாயிலினால் வழங்கினார். (அ)

# திருகோணமலை நோக்கி முள்ளிவாய்க்கால் பேரணி!

மட்டக்களப்பு, மே. 17

**இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட இனஅழிப்பின் மிக முக்கிய தடமாகவுள்ள முள்ளிவாய்க்கால் இனஅழிப்பின் 13ஆவது நினைவு ஆண்டை முன்னிட்டு பொத்துவில் தொடக்கம் முள்ளிவாய்க்கால் வரையில் முன்னெடுக்கப்படும் பேரணியானது நேற்று மட்டக்களப்பிலிருந்து ஆரம்பமானது.**




இலங்கையில் இடம்பெற்ற இனஅழிப்புக்கு நீதியைப் பெற்றுக்கொடு என்னும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்படும் இந்த பேரணியானது நேற்று முன் தினம் மாலை மட்டக்களப்பை வந்தடைந்த அதேநேரம் நேற்று காலை திருகோணமலை நோக்கி பேரணி நடைபெற்றது.

நேற்று காலை கல்லடிப் பாலத்துக்கு அருகில் முள்ளிவாய்க்கால் இன அழிப்பின் வேதனைகளை வெளிப்படுத்தும் நிகழ்வுகளில் ஒன்றாக கருதப்படும் உப்பற்ற கஞ்சி வழங்கப்பட்டு கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டதை தொடர்ந்து பேரணியானது திருகோணமலை நோக்கி பயணமானது.

வடக்கு-கிழக்கு மாகாண வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் அமைப்பின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் இந்த பேரணியில் மட்டக்களப்பு மாநகர சபையின் முதல்வர் தி.சரவணபவன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், ஞா.சிறிநேசன் என பலர் கலந்துகொண்டனர்.

பேரணியானது மட்டக்களப்பு நகரை வந்தடைந்து நகர் ஊடாக திருகோணமலை வீதியை சென்றடைந்து திருகோணமலை நோக்கி பயணமானது.

இன்று திருகோணமலையிலிருந்து முல்லைதீவு சென்று நாளை முள்ளிவாய்க்காலைச் சென்றடைந்து அங்கு இன அழிப்பு நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளது. (அ)

# மட்டு. போதனா மருத்துவமனையில் திருட்டில் ஈடுபட்ட இளைஞர் கைது!

மட்டக்களப்பு, மே 17

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகளின் கைபேசி, பணம் என்பவற்றை திருடிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இளைஞனை எதிர்வரும் 27ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்க ளப்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வைத்தியசாலையில் 22ஆவது விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெற்றுவந்த இருவரின் கைபேசிகள் களவாடப்பட்டிருந்தன. இதனால் அங்கு இரவில் சென்று வந்த இளைஞர் ஒருவர்மீது சந்தேகம் கொண்டு அது தொடர்பாக பொலிஸாருக்கு தெரிவிக் கப்பட்டது.

இதைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில் 24 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

உறவினர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுகிறார் என்றும் அவருக்கு துணையாக நிற்கவேண்டும் எனவும் கூறி மருத்துவமனையின் விடுதிக்குள் நுழைந்த அவர் நோயாளிகளின் கைபேசிகள், பணப் பைகளை களவாடியுள்ளார் என்று பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரிய வந்தது.

அத்துடன், அவரிடமிருந்து இரு கைபேசிகள், இரு தேசிய அட்டைகள், 9 ஏ. ரி. எம். அட்டைகள் இரண்டு சாரதி அனுமதிப்பத்திரம், 3 ஆயிரத்து தொள்ளாயிரம் ரூபாய் பணம் என்பன மீட்கப்பட்டன.

சந்தேகநபரை நேற்று முன்தினம் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் முற்படுத்தினர். இதையடுத்து அவரை வரும் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. (ஐ)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மட்டக்களப்பில் நாளை நடக்கும்!

மட்டக்களப்பு, மே 17

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு மட்டக்களப்பு, கல்லடி பிரதான வீதி ஸ்ரீ முருகன் ஆலயத்தில் இடம்பெறும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் தெரிவித்துள்ளார்.

மேலும், “முள்ளிவாய்க்காலில் கடந்த 13 வருடங்களுக்கு முன்பு இனப்படுகொலை செய்யப்பட்ட எமது உடன் பிறப்புக்களை நினைவு கூருவது எமது உரிமை. கடந்த 2019ஆம் ஆண்டு முதலாவது முள்ளிவாய்க்கால் நினைவு நாளை அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டுமே கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலும், மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்திலும் நடத்தினோம். 2010 தொடக்கம் தொடர்ந்து மட்டக்களப்பில் தமிழ்தேசிய கூட்டமைப்பு மூலம் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வு இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது” - என்றும் அவர் கூறினார். (ஐ)

# இன, மத மோதலை தவிர்க்க தெளிவூட்டும் செயலமர்வு!

அக்கரைப்பற்று, மே 17

இன, மதங்களிடையே மோதல்களை தூண்டிவிடும் செயல்பாடுகளை முறியடிப்பது தொடர்பான ஒருநாள் செயலமர்வு அக்கரைப்பற்று ‘மங்கோடான்’ கேட்போர்கூடத்தில் நேற்று நடைபெற்றது.

இலங்கை சமாதான பேரவையினர் அட்டாளைச்சேனை அபிவிருத்தி சமூகத்தினரின் அனுசரணையுடன் ஒழுங்கு செய்த இந்தத் தெளிவூட்டும் செயலமர்வில் சமூக வலையமைப்பு மற்றும் தொடர்பாடல்கள் ஆய்வாளர் சுகன் சங்கல்ப பிரதம வளவாளராகக் கலந்துகொண்டார்.

இதன்போது சமூகத்தில் நடைபெற்று வரும் வெறுப்புப்பேச்சு, கட்டவிழ்க்கப்பட்ட கதை,பொய்யான கதைகள் போன்றவைகளால் சமூகத்தில் நடைபெற்றுவரும் குழப்பநிலை, அமைதியின்மை போன்றவை தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன. (ஐ)

# திருகோணமலையில் வன்முறை; 10இற்கும் அதிகமானோர் கைது!

திருகோணமலை, மே 17

திருகோணமலையில் ஆர்ப்பாட்டம் மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டனர் என்ற சந்தேகத்தில் 10இற்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டனர்.

கந்தளாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று அறிய வருகின்றது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட வர்கள், திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில அதுக் கோரளவின் வீடுகள் சேதமாக் கப்பட் டமை தொடர்பில் பொலிஸாரால் வாக்குமூலம் பெறுவதற்காக அழைக்கப்பட்டு, சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டனர் என்று தெரிய வருகின்றது.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த சமூக செயற்பாட்டாளரும் இலங்கை ஆசிரியர் சேவைகள் சங்கத்தின் மாவட்டச் செயலாளருமான ரொஷான் அக்மீமன, “திருகோணமலையில் இடம்பெற்ற அரசாங்கத்துக்கு எதிரான அமைதி ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களே மேற்படி கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறான கைதுகள், அரசாங்கத்தின் சர்வாதிகாரத்தை வெளிக் காட்டுகின்றன” என்றார். (ஐ)

# இலங்கையைப் போன்று 69 நாடுகள் நெருக்கடியில்!

## உலக வங்கி, ஐ. நா. எச்சரிக்கை

நியூயோர்க், மே 17

கடுமையான பொருளாதார நெருக்கடியால் இலங்கை உருக் குலைந்தது போன்று, 69 நாடுகள் அந்த நிலைக்கு சென்று கொண்டி ருக்கின்றன என்று உலக வங்கி, ஐ. நா. போன்றவை எச்சரித்துள்ளன.

உணவுத்தட்டுப்பாடு மட்டு மின்றி கடன் சுமையும் இந்த நாடுக ளைப் பாதிக்கின்றன. கொரோனா பெருந்தொற்றுக்குப் பிறகு இலங்கை பெரும் பொருளாதார பாதிப்பை சந்தித்து வருகிறது. இதனால் கடு மையான எரிபொருள் பற்றாக்குறை நிலவுகிறது. தினசரி மின்வெட்டை யும் எதிர்கொள்கிறது.

இந்த நிலையில், உக்ரைன்மீது ரஷ்யா நடத்தி வரும் போர் உலக ளாவிய பொருளாதார சிக்கலை அதிகரித்துள்ளது. இந்த சூழலால் உலகம் முழுவதுமே பொருளாதார அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளது. கச்சா எண்ணெய், தங்கம் விலை கடுமையாக உயர்ந்து வருகின்றன. ஏற்கெனவே பொருளாதாரம் வேக மெடுத்துள்ளதால் தேவை அதிக ரித்து விலை உயர்ந்து வருகின்றன. சமையல் எண்ணெய் தொடங்கி கோதுமை வரை பல உணவுப் பொருட்களின் விலை அதிகரித்து வருகிறது. இதனால் பல நாடுகளில் பொருளாதார சிக்கல் உருவாகி வருகிறது. இலங்கையை போன்றே வேறு சில நாடுகளிலும் இதே போன்ற பொருளாதார பாதிப்பு, கடன் சுமை ஏற்பட்டுள்ளது.



கடந்த பெப்ரவரி 15ஆம் திகதி உக்ரைன்மீது ரஷ்யா போர் தொடங் குவதற்கு 9 நாட்களுக்கு முன்பாக உலக வங்கி மிக முக்கியமான அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அதில் 70 நாடுகள் பெரும் கடன் சுமை, அந்நியச் செலாவணி இழப்பு போன்ற சூழலில் இருக்கின்றன என்று தெரிவித்திருந்தது. இந்த நாடுகளில் 2022ஆம் ஆண்டில் பொருளாதாரம் அழியும் சூழலில் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டி ருந்தது. ஐ. நாவும் இதே கருத்தை கூறியிருந்தது.

இந்நிலையில், பொருளாதார நெருக்கடியை சந்தித்துவரும் 69 நாடுகளில் 25 நாடுகள் ஆசிய - பசுபிக்கையும், 25 நாடுகள் ஆபிரிக் காவையும், 19 நாடுகள் இலத்தீன் அமெரிக்காவையும் சேர்ந்தவை யாகும்.

இதில் அதிக நெருக்கடிக்கு உள்ளாகும் முதல்நாடாக எகிப்து உள்ளது. அடுத்த இடத்தில் துனீசியா துருக்கி என்பன உள்ளன.

நெருக்கடியை எதிர்கொள்ளும் நாடுகளில் அரசியல் சிக்கல்கள், வறுமை என்பன அதிகரித்துள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேசமயம், 170 கோடி மக்கள் பஞ்சத்தை எதிர்கொள்ளும் நிலை யில் உள்ளனர் என்று உலகவங்கி, ஐ.நா. என்பன எச்சரித்துள்ளன.

(ஐ)




## நியூயோர்க் துப்பாக்கி சூடு; 13ஆக உயர்ந்தது உயிரிழப்பு

நியூயோர்க், மே 17

அமெரிக்காவின் நியூயோர்க் மாகாணம் - பபேலோ நகரில் உள்ள வணிக வளாகம் ஒன்றுக்குள் நுழைந்து ஆயுததாரி ஒருவர் 13 பேரை சுட்டுக் கொன்ற சம்பவம் இனவெறி அடிப்படையிலேயே இடம்பெற்றுள்ளதாக தெரியவந்துள்ளது.

சுட்டுக் கொல்லப்பட்ட 13 பேரில் 11 பேர் கறுப்பினத்தவர்கள் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில் இது இனவெறியை அடிப்படையாகக் கொண்ட தீவிரவாதச் செயலாக கருதி விசாரிக்கப்பட்டு வருகிறது.

பபேலோ நகரில் உள்ள வணிக வளாகத்தில் சனிக் கிழமை துப்பாக்கிச் சூடு நடத்திய கொலையாளி, அதிக கறுப்பின மக்கள் வசிக்கும் இடத்தை திட்டமிட்டே இலக்கு வைத்தாரென அதிகாரிகள் கூறுகின்றனர்.

18 வயதான பெய்டன் ஜென்ட்ரான் என்ற கொலையாளி தாக்குதலை நடத்துவதற்காக 320 கி.மீ. வேகத்தில் காரை ஓட்டிச் சென்றுள்ளார் என்று பொலி ஸார் கூறுகின்றனர். அத்துடன், வணிக வளாகத்துக்குள் நுழைய முன்னர் அதிகளவானவர்களை சுட்டுக் கொன்று அதனை நேரலை செய்யவுள்ளாரெனக் கொலையாளி சமூக வலைத்தளத்தில் பதிவிட்டுள்ள காட்சிகளும் வெளியாகியிருந்தன.

முடிந்தவரை அதிகளவு கறுப்பின மக்களை கொலை செய்யும் நோக்குடனேயே கொலையாளி இந்தத் தாக் குதலை நடத்தினாரென பபேலோ நகர மேயர் பைரன் பிரவுன் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கொலையாளி ஏற்கனவே பொலிஸா ரின் கண்காணிப்பு பட்டியலில் இருந்தவராவார். கடந்த ஜூன் மாதம் தனது உயர்நிலைப் பள்ளியில் துப பாக்கிச் சூடு நடத்துவதாக இவர் மிரட்டல் விடுத்ததை அடுத்து கண்காணிக்கப்பட்டு வந்தார். இதையடுத்து அவருக்கு மனநல பரிசோதனை செய்யப்பட்டது.

கொலையாளியான பெய்டன் ஜென்ட்ரான் தன்னை ஒரு பாசிஸ்ட் மற்றும் ஒரு வெள்ளை மேலாதிக்கவாதி என்று விவரித்துள்ளார். அவர் தொடர்பான விசா ரணை ஆவணத்தில் இது பதிவு செய்யப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூடு நடப்பதற்கு முந்தைய நாள் சந்தேக நபர் அப்பகுதியில் உளவு பார்த்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

## தேவாலயத்தில் துப்பாக்கி சூடு; கலிபோர்னியாவில் ஒருவர் பலி!

கலிபோர்னியா, மே 17

அமெரிக்கா - கலிபோர்னியா தெற்கில் உள்ள கிறிஸ் தவ தேவாலயம் ஒன்றுக்குள் புகுந்து ஆயுததாரி ஒருவர் நேற்று ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்ட துப்பாக்கி சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் நான்கு பேர் படுகாயமடைந்தனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

துப்பாக்கி சூட்டைத் தொடர்ந்து கலிபோர்னி யாவின் லாகுனா வூட்ஸில் உள்ள ஜெனிவா பிரஸ்பை டிரியன் தேவாலயத்திற்கு வெளியே துப்பாக்கிதாரி கைது செய்யப்பட்டாரெனப் பொலிஸ் செய்தித் தொடர்பாளர் காரி பிரவுன் தெரிவித்தார். துப்பாக்கிச் சூடு நடத்தியதற்கான காரணம் உடனடியாகத் தெரியவில்லை என்று அவர் கூறினார்.

பாதிக்கப்பட்டவர்களில் மூன்று பேரின் நிலை கவலைக்கிடமான நிலையில் இருக்கின்றனர். மற்றொருவர் சிறு காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகிறார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொலையாளியான நபர் தேவாலயத்திற்குள் வைத்து அதிகாரிகளால் மடக்கிப் பிடிக்கப்பட்டார். அவரிடம் இருந்த துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டது என தெரிவித்த காரி பிரவுன், பாதிக்கப்பட்டவர்கள் பற்றிய கூடுதல் விவரங்களை வெளியிடவில்லை.

துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற நேரம் தேவாலயத் துக்குள் அதிக எண்ணிக்கையான தாய்வானியர்கள் வழிபாட்டில் பங்கேற்றிருந்தனர். எனினும் அவர்களை இலக்குவைத்தே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதா? எனத் தெளிவாகத் தெரியவில்லை எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)



## வடகொரியாவில் தொற்று; உயிரிழப்பு 50ஆக உயர்வு!

பியோங்யாங், மே 17

வட கொரியாவில் கொரோனா தொற்று நோய் தீவிர மான நிலையில், அங்கு பலியானோர் எண்ணிக்கை 50ஆக உயர்ந்துள்ளது.

தற்போது 3 இலட்சத்து 92 ஆயிரத்து 920 பேர் காய்ச் சல் உள்ளிட்ட கோவிட் அறிகுறிகளை வெளிப்படுத்தி யுள்ளனர் என்று வடகொரிய அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

இதேவேளை, புதிய கோவிட் அலை வட கொரி யாவின் தீவிரமாகி வரும் நிலையில் நாட்டின் தலைநகர் பியோங்யாங்கில் தொற்றுநோய் உதவிப் பணிகளில் இராணுவத்தை ஈடுபடுத்தி அரச தலைவர் கிம் ஜாங் உன் உத்தரவிட்டார்.

வட கொரியா முதல் கொரோனா தொற்று நோயாளி கடந்த 12 ஆம் திகதி உத்தியோகபூர்வமாக உறுதிப் படுத்தப்பட்ட நிலையில் மறுநாளோ ஒரு கொரோனா மரணம் உறுதி செய்யப்பட்டது.

எனினும் ஏப்ரல் பிற்பகுதியில் இருந்து 12 இலட்சத் துக்கும் அதிகமான மக்களிடையே மர்மக் காய்ச்சல் வேகமாக பரவி வந்த நிலையில் இது கொரோனா அறி குறியே என தற்போது உணரப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

## ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு போரில் உக்ரைனால் வெற்றி பெறமுடியும்!

### நேட்டோ நம்பிக்கை

பெர்லின், மே 17

ரஷ்யாவின் ஆக்கிரமிப்பு போரை எதிர்த்து உக்ரைன் வெற்றி பெற முடியும் என நேட்டோ பொதுச் செய லாளர் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் தெரிவித்துள்ளார்.

நேட்டோவின் உயர்மட்ட இராஜதந்திரிகளுக்கு இடையே ஜேர்மனியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விசேட சந்திப்பில் இணைய வழி நேரலை தொழில் நுட்பம் ஊடாக பங்கேற்று கருத்து வெளியிட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

உக்ரைன் படையினர் தங்கள் தாயகத்தை பாது காக்க தைரியமாக போரிட்டு வருகின்றனர். நேட்டோ இராணுவ கூட்டணியில் சேர பின்லாந்து மற்றும் சுவீடன் எதிர்பார்க்கும் நிலையில் அதற்கான ஒப்புதல் வழங்கும் நடவடிக்கையை துரிதப்படுத்த வேண்டும் என்றும் ஜென்ஸ் ஸ்டோல்டன்பெர்க் தெரிவித்தார்.

இதனிடையே உக்ரைன் கிழக்கு - டான்பாஸ் பிராந்தியத்தில் ரஷ்யப் படைகளின் தாக்குதல் வேகம் குறைந்துவிட்டது. மேலும் திட்டமிட்டவாறு ரஷ்யா வால் முன்னேற முடியவில்லை.

அடுத்த 30 நாட்களில் ரஷ்யா தனது முன்னேற்ற விகிதத்தை வியத்தகு முறையில் துரிதப்படுத்த வாய்ப் பில்லை என இங்கிலாந்து இராணுவ உளவுத்துறை தெரிவித்துள்ளது.

ரஷ்யா உக்ரைனுக்கு அனுப்பிய தரைப்படைகளில் மூன்றில் ஒரு பகுதியை இழந்திருக்கலாம் எனவும் இங்கி லாந்து இராணுவ உளவுத்துறை குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, கிழக்கில் ரஷ்ய ஆதரவு பிரிவினை வாதிகளின் ஆதிக்கத்தின் கீழ் உள்ள லுஹான்ஸ்கில் 10 வீதத்தை உக்ரைன் இன்னும் கட்டுப்பாட்டில் வைத் துள்ளதாக அப்பிராந்திய ஆளுநர் செர்ஹி கெய்டாய் தெரிவித்துள்ளார்.

ரூபிஸ்னே, செவெரோடோனெட்ஸ்க் மற்றும் லிசிசான்ஸ்க் நகரங்களின் புறநகர்ப் பகுதிகளை ரஷ்ய இராணுவத்தால் இன்னும் கைப்பற்ற முடியவில்லை என்று அவர் கூறினார்.

(ஐ)

# குஜராத் ரைட்டன்ஸ் அணியிடம் இலகுவாக வீழ்ந்தது சென்னை!



மும்பை, மே 17

சென்னை அணியை மிக இலகுவாக 7 விக்கெட்களால் வெற்றி கொண்டது குஜராத் ரைட்டன்ஸ் அணி. இது சென்னையின் 9ஆவது தோல்வியாக அமைந்தது.

ஐ. பி. எல். இருபது - 20 தொடரில் நேற்றுமுன்தினம் மும்பையில் நடந்த போட்டியில் சென்னை - குஜராத் அணிகள் மோதின.

இந்தப் போட்டியில் ஈட்டிய வெற்றியுடன் அணிகள் நிலையில் குஜராத் ரைட்டன்ஸ் 20 புள்ளிகளுடன் முதலாம் இடத்தை உறுதிசெய்து கொண்டது.

134 ஓட்டங்கள் என்ற இலக்கை துரத்திய குஜராத் அணிக்கு விரித்திமன் சஹாவும் ஷுப்மன் கில்லும் 59 ஓட்டங்களைப் பகிர்ந்து நல்ல ஆரம்பத்தை ஏற்படுத்திக் கொடுத்தனர். ஷுப்மன் கில் 18 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழக்க, அடுத்து களம் நுழைந்த மெத்யூ வேட் 20 ஓட்டங்களைப் பெற்றார்.

அணித் தலைவர் ஹார்திக் பாண்ட்யா 7 ஓட்டங்களுடன் 3ஆவதாக ஆட்டமிழந்தபோது குஜராத் ரைட்டன்ஸின் மொத்த எண்ணிக்கை 100 ஓட்டங்களாக இருந்தது.

தொடர்ந்து சஹா ஆட்டமிழக்காமல் 67 ஓட்டங்களையும் டேவிட் மில்லர் ஆட்டமிழக்காமல் 15 ஓட்டங்களையும் பெற்று அணியின் வெற்றயை உறுதிப்படுத்தினர்.

பந்துவீச்சில் மதீஷ பத்திரண 24 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார். முன்னதாக முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் 20 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது.

டெவன் கொன்வே 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்ததும் சென்னை சுப்பர் கிங்ஸ் அழுத்தத்தை எதிர்கொண்டது. ருத்துராஜ் கெய்க்வாட், மொயின் அலி ஆகிய இருவரும் 2ஆவது விக்கெட்டில் 57 ஓட்டங்களைப் பகிர்ந்து அணிக்கு சிறு நம்பிக்கை ஊட்டினர்.

மொயின் அலி 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்த பின்னர் கெய்க்வாட்டுடன் 3ஆவது விக்கெட்டில் இணைந்த நாராயன் ஜெகதீசன் 48 ஓட்டங்களைப் பகிர்ந்திருந்தபோது கெய்க்வாட் 53 ஓட்டங்களுடன் களம் விட்டு வெளியேறினார்.

ஷிவம் டுபே (0), அணித் தலைவர் எம். எஸ். டோனி (7) ஆகிய இருவரும் துடுப்பாட்டத்தில் பிரகாசிக்கவில்லை.

நாராயண் ஜெகதீசன் 39 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காதிருந்தார்.

பந்துவீச்சில் மொஹமத் ஷமி 19 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்களைக் கைப்பற்றினார்.

பங்களாதேஷுடனான டெஸ்ட்:

# மத்தியூஸ் அபார ஆட்டம் இலங்கை 397 ஓட்டங்கள்!



டாக்கா, மே 17

மத்தியூஸின் அபாரமான ஓட்டக் குவிப்பால் பங்களாதேஷ் அணிக்கு எதிராக முதல் இனிங்ஸில் 397 ஓட்டங்களை குவித்துள்ளது இலங்கை அணி. இந்தப் போட்டியில் ஓர் ஓட்டத்தால் இரட்டை சதம் அடிக்கும் வாய்ப்பை தவறவிட்டார் மத்தியூஸ்.

இலங்கை - பங்களாதேஷ் அணிகள் மோதும் இந்தப் போட்டி நேற்று முன்தினம் டாக்காவில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணியின் தலைவர் திமுத் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதன்படி களமிறங்கிய இலங்கை அணிக்கு ஆரம்பம் சரியாக அமையவில்லை. அணி 23 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது அணித் தலைவர் திமுத் 9 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இரண்டாவது விக்கெட்டுக்காக ஒசத பெர்னாணடோவுடன் இணைந்தார் குஷல் மெண்டிஸ். இந்த இணை ஓரளவு பொறுப்பாக ஆட ஆரம்பித்தது.

ஒசத பெர்னாண்டோ 36 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழக்கவே அடுத்து வந்தார் மத்தியூஸ், மூன்றாவது விக்கெட்டுக்காக இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். 92 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். குஷல் மெண்டிஸ் அரைச்சதம் கடந்த நிலையில் 54 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

ஒரு புறத்தில் மத்தியூஸ் நிலைக்க மறுமுனையில் வந்த தனஞ்சய டீ சில்வா 6 ஓட்டங்களுடன் வெளியேறினார். பின்னர் வந்த தினேஷ் சந்திமால் மத்தியூஸுக்கு துணை நின்றார். இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

தினேஷ் சந்திமால் 66 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கவே, அவரைத் தொடர்ந்து வந்த வீரர்களும் சொற்ப ஓட்டங்களுடன் வெளியேறினர். இந்நிலையில், 199 ஓட்டங்களை குவித்த (19 பௌண்ட்ரிகள், ஒரு சிக்ஸருடன்) மத்தியூஸ் ஓர் ஓட்டத்தால் இரட்டை சதத்தை தவறவிட்டு ஆட்டமிழந்தார்.

முதல் இனிங்ஸுக்காக இலங்கை அணி 397 ஓட்டங்களைக் குவித்தது.

பங்களாதேஷின் பந்துவீச்சில் நயீம் ஹசன் 6 விக்கெட்கள், சகீப் அல் ஹசன் 3 விக்கெட்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடி வரும் பங்களாதேஷ் அணி நேற்று இரண்டாம் நாள் ஆட்டம் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 76 ஓட்டங்களை எடுத்துள்ளது.

மஹ்முதுல் ஹசன் ஜோய் 31, தமீம் இக்பால் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் உள்ளனர்.

இன்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டமாகும்.

(ஐ)

# இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் சம்பியனானார் ஜொகோவிச்



ஆறாவது முறையாக இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஆடவர் ஒற்றையர் பிரிவில் சம்பியன் பட்டம் வென்றுள்ளார் ஜொகோவிச். இது நடப்பு ஆண்டில் அவர் வென்றுள்ள முதல் சம்பியன் பட்டமாகும்.

சேர்பிய நாட்டை சேர்ந்தவர் 34 வயதான ஜொகோவிச். ரென்னிஸ் உலகின் முதல்நிலை வீரராவார். இந்த ஆண்டின் தொடக்கத்தில் நடைபெற்ற அவுஸ்திரேலிய ஓப்பன் தொடரில் கொரோனா தடுப்பூசி செலுத்தாததால் அவர் பங்கேற்க அனுமதிக்கப்படவில்லை. தொடர்ந்து சில பிரதான ரென்னிஸ் தொடர்களில் அவர் விளையாடவில்லை.

இந்நிலையில், இத்தாலி ஓப்பன் தொடரில்அவர் விளையாடியிருந்தார். இந்த தொடரில் அவர் விளையாடிய அனைத்து போட்டிகளிலும் நேர் செற் கணக்கில் ஆட்டத்தை வென்று அசத்தினார். இதன் மூலம் ஆறாவது முறையாக அவர் இத்தாலி ஓப்பன் பட்டத்தை வென்றார்.

இந்தத் தொடரின் இறுதிப் போட்டியில் சிட்சிபாஸை 6 - 0, 7 - 6 என்ற கணக்கில் வீழ்த்தினார் ஜொகோவிச்.

முன்னதாக, அரையிறுதியில் வெற்றி பெற்றதன் மூலம் ஆடவர் ஒற்றையர் பிரிவில் ஆயிரம் வெற்றிகளை பதிவு செய்த வீரர் என்ற மைல்கல்லை எட்டினார் அவர். இந்த சாதனையை படைத்துள்ள ஐந்தாவது வீரரானார். (ஐ)

# இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் சம்பியன் வென்றார் இகா!

ரோம், மே 17

துனீசியாவின் ஒன்ஸ் ஜபெயுரை இலகுவாக வீழ்த்தி இத்தாலி ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் பிரிவின் சம்பியனானார் இகா ஸ்வியாரெக்.

போலந்து நாட்டை சேர்ந்தவர் 20 வயதான ஸ்வியாரெக் மகளிர் தரவரிசையில் முதலிடத்தில் தொடர்கிறார்.

நேற்று நடந்த இத்தாலி ஓப்பன் ரென்னிஸின் இறுதியாட்டத்தில் அவர் ஜபெயுரை எதிர்கொண்டார்.

இந்தப் போட்டியை 6 -2, 6- 2 என்ற செற்களில் இலகுவாக வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றினார். இந்த ஆண்டில் இவர் கைப்பற்றிய 5ஆவது சம்பியன் பட்டம் இதுவாகும். (ஐ)



# ஐ.பி.எல்லில் அதிக சிக்ஸர் பட்லர் புதிய சாதனை!

மும்பை, மே 17

ஐ. பி. எல். 2022 போட்டியில் இதுவரை 885 சிக்ஸர்கள் அடிக்கப்பட்டுள்ளன. இதுவரை நடைபெற்ற ஐ. பி. எல். போட்டிகளில் வேறு எந்த வருடத்திலும் இத்தனை சிக்ஸர்கள் அடிக்கப்படவில்லை.

இதற்கு முன்பு 2018 போட்டியில் 872 சிக்ஸர்கள் அடிக்கப்பட்டன. அந்த சாதனையை இந்த வருடம் முறியடித்து விட்டது. இன்னும் லீக் ஆட்டங்கள் முடிய ஒரு வாரம் மீதமுள்ளது. அதற்குப் பிறகு இறுதிச் சுற்று ஆட்டங்கள்.

எனவே முதல்முறையாக ஐ. பி. எல். போட்டியில் 900 சிக்ஸர்கள் அடிக்கப்படுவது உறுதி.



அதிக சிக்ஸர்கள் அடித்த வீரர்களின் பட்டியலில் 37 சிக்ஸர்களுடன் பட்லர் முதலிடத்திலும் 32 சிக்ஸர்களுடன் ரஸல் 2ஆம் இடத்திலும் லிவிங்ஸ்ரன் 29 சிக்ஸர்களுடன் 3ஆம் இடத்திலும் உள்ளார்கள்.

# எஞ்சிய அமைச்சர்களின் நியமனம் நாளைக்கு பின்?

கொழும்பு, மே 17

18 பேர் கொண்ட புதிய அமைச்சரவைக்கான எஞ்சிய நியமனங்கள் நாளை புதன்கிழமைக்கு பின்னர் வழங்கப்படக்கூடும் என அரசியல் வட்டார தகவல்கள் தெரிவிக்கின்றன.

சுகாதாரம், விவசாயம் மற்றும் கல்வி ஆகிய துறைகளுக்கு ஏற்கனவே மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதற்கமைய புதிய கல்வி அமைச்சராக கலாநிதி சுசில் பிரேமஜயந்த நியமிக்கப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

அத்துடன், விவசாய அமைச்சராக அனுர பிரியதர்ஷன யாப்பாவும், சுகாதார அமைச்சராக நிமால் சிறிபால டி சில்வாவும் நியமிக்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, முன்னாள் நிதியமைச்சர் அலி சப்ரி அமைச்சுப் பதவியை ஏற்கத் தயக்கம் காட்டுவதால், அந்த அமைச்சை பிரதமரின் கீழ் வைத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவர் அமைச்சுப் பதவியை பெற விரும்பினால், அவருக்கு மீண்டும் நிதியமைச்சர் பதவி வழங்கப்படவுள்ளதாகவும் தெரியவருகிறது. (அ)

# நடமாடும் குற்றத்தடுப்பு கண்காணிப்பு பணிகளில் ஈடுபட பொலிஸார் முடிவு

கொழும்பு, மே 17

அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும், நடமாடும் குற்றத்தடுப்பு கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான அறிவித்தல் சகல பொலிஸ் நிலையங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

குற்றச்செயல்களில் ஈடுபட சிலர் தூண்டப்படுவதாக புலனாய்வு திணைக்களத்திற்கு தகவல் கிடைக்கப்பெற்றுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

எனவே, அதனை தவிர்க்கும் வகையில் சகல பொலிஸ் பிரிவுகளிலும் பொலிஸ் தடை களை ஏற்படுத்தி கண்காணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது. (அ)

# ஓ.எல் மேலதிக வகுப்புகளுக்கு இன்று நள்ளிரவு முதல் தடை

கொழும்பு, மே 17

கல்விப் பொதுத்தராதர சாதாரண தர பரீட்சையுடன் தொடர்புடைய மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்துவதற்கு இன்று நள்ளிரவு முதல் பரீட்சை நிறைவடையும் வரை தடை விதிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

2021 கல்வி பொதுத் தராதர சாதாரண தர பரீட்சைக்கான அனுமதிப்பத்திரத்தை பரீட்சைகள் திணைக்களத்தின் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்து கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரங்கள் இதுவரை கிடைக்கவில்லையெனின், பரீட்சைகள் திணைக்களத்தின் www.doenets.lk எனும் இணையத்தளத்திற்குள் பிரவேசித்து, அதன் முதற் பக்கத்திலுள்ள எமது சேவைகள் எனும் நிரலின் கீழுள்ள க.பொ.த.சாதாரண தரம் 2021 அனுமதிப்பத்திர பதிவிறக்கம் பகுதியை தெரிவு செய்து, சரியான தேசிய அடையாள அட்டை இலக்கம் அல்லது பரீட்சை இலக்கத்தை குறிப்பிட்டு அனுமதிப்பத்திரத்தின் பிரதியை பதிவிறக்கம் செய்ய முடியும் என பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (அ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 05 - 05 - 1952

மறைவு 13 - 05 - 2022

### கணபதிப்பிள்ளை மகேஸ்வரன்

நயினாதீவு 3ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸ் Le Blanc - Mesnil ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை மகேஸ்வரன் அவர்கள் 13.05.2022 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் கணபதிப்பிள்ளை(கிரிடியர்) நாகரெத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற கதிரவேலு, லோகநாயகி (பாக்கியம்- கனடா) தம்பதிகளின் அன்பு மருமகனும்,சுசிலாதேவி(பிரான்ஸ்) அவர்களின் ஆருயிர்க் கணவரும்,ஆர்த்திகா(பிரான்ஸ்), கீர்த்திகா(பிரான்ஸ்), அஜந்தன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஜெயந்தன் (பிரான்ஸ்) அவர்களின் பாசமிகு மாமாவும்,சித்தார்த்(பிரான்ஸ்), மாயா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான பரமேஸ்வரன், பரமேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி (இலங்கை), காலஞ்சென்ற கேதீஸ்வரி, சிவனேஸ்வரன்(இலங்கை), சாரதாமணி(கனடா), நகுலேஸ்வரி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், உமாமகேஸ்வரி(கனடா), காலஞ்சென்றவர்களான சரவணமுத்து, கதிர்காமலிங்கம், அங்குசபாலன் மற்றும் கனகாம்பிகை(இலங்கை), கோடீஸ்வரன்(கனடா), கந்தசாமி (கனடா), தர்மலிங்கம்(பிரான்ஸ்), இந்திராணி(பிரான்ஸ்), உமாராணி(ஜேர்மனி), இராஜசிறி(கனடா), சந்திரசிறி(கனடா), காலஞ்சென்ற கலாநிதி மற்றும் குகராணி(கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விபரம் பின்னர் அறியத தரப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
**கண்ணன் (சகோதரன்).**

தொடர்புகளுக்கு:
**கண்ணன் - சகோதரன்** Mobile : +33652566581
**நயினை ஜெயந்தன் - மருமகன்** Mobile : +33786870308

### பற்றைக்காடாக காட்சி தரும் குஞ்சுக்குளம் சுற்றுலா மையம்

மன்னார், மே 17

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குஞ்சுக்குளம் தொங்கு பாலம் பகுதியில் கடந்த 2014 ஆம் ஆண்டு வடமாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட நிதியில் அமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்ட சுற்றுலா மைய கட்டடத் தொகுதி பாழடைந்த நிலையில் அங்கு பொருட்கள் உடைக்கப்பட்டுள்ளமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 2014 ஆம் ஆண்டு வடமாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை நிதி உதவியில் குஞ்சுக்குளம் தொங்கு பாலம் பகுதியில் அமைக்கப்பட்ட சுற்றுலா மையம் கடந்த 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 16 ஆம் திகதி வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் அதிகாரிகளினால் வைபவ ரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மடு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள குறித்த சுற்றுலா மையம், நானாட்டான் பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் காணப்படுகின்றது.

இந்த நிலையில் குறித்த சுற்றுலா மையம் தற்போது அடர்ந்த காடு போல் காட்சியளிப்பதோடு, குறித்த மைய கட்டடத்தொகுதி சேதமாக்கப்பட்டுள்ளதோடு, பொருட்களும் உடைக்கப்பட்டுள்ளனது.

பல லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் அமைக்கப்பட்டு பாவனைக்காக கையளிக்கப்பட்டு சுமார் 6 வருடங்கள் ஆகியுள்ள நிலையில் இவ்வாறு சேதப்படுத்தப்பட்டு மக்கள் பாவனை இன்றி காணப்படுகின்றமை குறித்து மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் தொடர்பாக நானாட்டான் பிரதேச சபை துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என மக்கள், நலன் விரும்பிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ)

## மரண அறிவித்தல்



தோற்றம் 29 - 10 - 1964

மறைவு 13 - 05 - 2022

### இராசேந்திரன் கந்தசாமி (ராஜா)

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், கனடா Scarborough வை வசிப்பிடமாகவும் கொண்ட இராசேந்திரன் கந்தசாமி அவர்கள் 13.05.2022 வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் இறைபதம் எய்தினார்.

அன்னார், காலஞ்சென்ற கந்தசாமி, விசாலாட்சி தம்பதிகளின் அன்புப் புதல்வரும், காலஞ்சென்ற மயில்வாகனம், விஜயலட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகனும்,பானுமதி (பானு) அவர்களின் பாசமிகு கணவரும்,ரவீந்திரன், விநோஜ், காவியா ஆகியோரின் அன்புத் தந்தையும்,சுயேந்திரன்(வவா), காலஞ்சென்ற ரதி, பாலேந்திரன், காலஞ்சென்றவர்களான இராசசுலோச்சனா, தர்மாம்பாள் மற்றும் விஜயரஞ்சனி, மாவீரர் ரவீந்திரன் ஆகியோரின் அன்புச்சகோதரரும்,ஸ்ரீகாந்தன்(ஜேர்மனி),வளர்மதி(இலங்கை), மதனகாந்தன்(பிரான்ஸ்), இந்துமதி(இலங்கை), காலஞ்சென்ற ரூபகாந்தன்(இலங்கை), பத்மகாந்தன்(இலங்கை), விஜயகாந்தன் (இலங்கை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

பார்வைக்கு
Wednesday, 18 May 2022 6:00 PM - 9:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Thursday, 19 May 2022 10:30 AM - 12:30 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Thursday, 19 May 2022 1:00 PM
Chapel Ridge Funeral Home & Cremation Centre 8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
**பாலன் (சகோதரன்).**

தொடர்புகளுக்கு:
**வவா - சகோதரன்** Mobile : +16476214259
**பாலன் - சகோதரன்** Mobile : +14168543859
**ரஞ்சி - சகோதரி** Mobile : +14165736168

## சவால்களை வெற்றிகொள்வேன்...

கேட்கவில்லை. நாட்டில் ஏற்பட்டிருந்த நெருக்கடி நிலையை கருத்தில் கொண்டு இந்தப் பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு ஜனாதிபதி எனக்கு அழைப்பு விடுத்தார். அதை நான் ஏற்றுக்கொண்டேன்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையிலேயே உள்ளது. 2022 ஆரம்பத்தில் கடந்த அரசாங்கத்தின் வரவுசெலவு திட்டத்தில் 2.3 ட்ரில்லியன் ரூபாய்கள் வருமானமாக உள்ளன எனக் காட்டப்பட்டாலும் இந்த வருடத்திற்கான உண்மையான வருமான எதிர்வு கூறல் 1.6 ட்ரில்லியன் ரூபாய்களாகவே உள்ளன.

2022 ஆம் ஆண்டுக்கான அரசின் செலவு 3.3 ட்ரில்லியன் ரூபாய்கள். எவ்வாறாயினும் கடந்த அரசில் வட்டி விகிதம் அதிகரித்தமை மற்றும் மேலதிக செலவுகள் காரணமாக 2022 ஆம் ஆண்டுக்கான அரசின் மொத்த செலவு 4 ட்ரில்லியன் ரூபாய்களாகும். வருடத்துக்கான வரவு - செலவு பற்றாக்குறை 2.4 ட்ரில்லியன் ரூபாய்களாக உள்ள அதேவேளை அது சராசரி தேசிய உற்பத்தியில் நூற்றுக்கு 13 வீதமாகும் .

இதேபோன்று அங்கீகரிக்கப்பட்ட கடன் எல்லை 3,200 பில்லியன் ரூபாயாகும் . நாம் மே மாதத்தின் இரண்டாம் வாரம் ஆகும்போது 1,950 மில்லியன் ரூபாய்களை செலவு செய்திருந்தோம். அதன்படி அண்ணளவான மிகுதி 1,250 மில்லியன் ரூபாய்கள். நாம் நேற்று (நேற்று முன்தினம்) அமைச்சரவையில் திறைசேரி முறிகளை வழங்கும் அனுமதிக்கப்பட்ட எல்லையை 3,000 பில்லியனில் இருந்து 4,000 பில்லியன் வரை அதிகரிக்கும் யோசனை ஒன்றை பாராளுமன்றத்தில் முன்வைக்க ஒரு தீர்மானத்தை எடுத்தோம்.

2019 நவம்பர் மாதத்தில் எமது அந்நியச் செலாவணி கையிருப்பு 7.5 பில்லியன் அமெரிக்க டொலர்கள் இருந்தன. ஆனால், இன்று திறைசேரியால் ஒரு மில்லியன் டொலர்களைக் கூட தேடிக்கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எரிவாயுவை கப்பலில் ஏற்றும் பொருட்டு செலுத்தத் தேவையான 5 மில்லியன் அமெரிக்க டொலர்களைக்கூட இந்த நேரத்தில் நிதியமைச்சால் தேடிக்கொடுக்க முடியாதுள்ளது.

இந்த அனைத்து நெருக்கடிகளுக்கும் மத்தியில் நாம் முகம் கொடுக்கும் மிக மோசமான சில சிக்கல்கள் உள்ளன. எதிர் வரும் சில நாட்களில் வரிசைகளை கட்டுப்படுத்தும் பொருட்டு மிகவிரைவில் சுமார் 75 மில்லியன் அமெரிக்க டொலர்களை தேடவேண்டியுள்ளது. இப்போது நமது கையிருப்பில் ஒரு நாளைக்குத் தேவையான பெற்றோல் மட்டுமே உள்ளது. நேற்று வந்த டீசல் கப்பலால் இன்றில் இருந்து உங்களின் டீசல் பிரச்னைக்கு ஓரளவு தீர்வு கிடைக்கும். இந்திய கடனுதவி திட்டத்தின் கீழ் மே 19 மற்றும் ஜூன் 01 ஆகிய திகதிகளில் மேலும் இரண்டு டீசல் கப்பல்களும் மே 18 மற்றும் மே 29 இரண்டு பெற்றோல் கப்பல்கள் வரவுள்ளன. இன்று வரை 40 நாட்களுக்கு மேலாக இலங்கையின் கடற்பரப்பில் பெற்றோல், மசகு எண்ணெய் , ஏற்றிவந்த கப்பல்கள் 3 நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு செலுத்தும் பொருட்டு திறந்த சந்தையில் டொலர்களை பெற்றுக் கொள்ள நடவடிகை எடுக்கப்படும்.

மின்சாரத் தேவையில் நான்கில் ஒன்றை உற்பத்தி செய்ய எரிபொருளே பயன்படுத்தப்படுகிறது. இதனால் நாளாந்த மின்வெட்டு இன்னும் சில நாட்களில் 15 மணித்தியாலங்களாக மாறவும் இடமுண்டு. ஆனால், நாம் இதற்கு தேவையான நிதியை தேடிக் கொண்டுள்ளோம்.

இந்த நேரம் வரை இலங்கை மத்திய வங்கி, அரச வங்கிகள், தனியார் வங்கிகள் , இலங்கையில் உள்ள வெளி நாட்டு வங்கிகள் அனைத்தும் டொலர் இல்லாத சிக்கலுக்கு முகம் கொடுத்துள்ளன. நம்மிடம் கையிருப்பில் உள்ள டொலர்களின் அளவு மிகவும் சிறியது. ஆனால், இவ்வனைத்து சிரமங்களுக்கு மத்தியில் நேற்று ஒரு டீசல் ஏற்றிய கப் பலை நேற்றுக் கொண்டு வந்தோம். அத னால் இன்று முதல் அந்த டீசலை உங்களால் பெற்றுக்கொள்ள முடியும். இதன்பொருட்டு இந்தியாவின் ஒத்துழைப்பு நமக்கு கிடைத்தது. இதேபோன்று எரிவாயு பிரச்னைகளுக்கு ஏதோவொரு தீர்வு கிடைக்கும்.

இதனிடையே, 14 அத்தியாவசிய மருந்துகள் தட்டுப்பாடாக உள்ளமையும், அதில் இரண்டையாவது வழங்க இந்த நேரத் தில் எமது மருத்துவ வழங்கல் பிரிவுக்கு இயலாது உள்ளமை மிகவும் வருந்தத் தக்க விடயமாக உள்ளது. இருதய நோய்களுக்கு பயன்படுத்தப்படும் மருந்து, மற்றும் விசர் நாய்க்கடி எதிர்ப்பு மருந்து ஆகியவையே அந்த இரண்டு மருந்துகளாகும். ஆனால், விசர் நாய்க் கடி எதிர்ப்பு மருந்துக்கு மாற்று மருந்து எதுவும் இல்லை.

இதனிடையே, 2022 ஆண்டுக்காக முன்வைக்கப்பட்ட அபிவிருத்தி வரவு - செலவு திட்டத்துக்கு பதிலாக புதிய வரவு - செலவு திட்டமொன்றை முன்வைக்க திட்டமிடப்பட்டுள்ளது. அதனை சலுகை வரவு - செலவு திட்டமாக முன்வைக்கவே நான் திட்டமிடுகிறேன்.

இதேபோல், இதுவரை நட்டத்தில் இயங்கிக் கொண்டிருக்கும் சிறீ லங்கன் விமான சேவையை தனியார் மயப்படுத்துமாறு நான் முன்மொழிகின்றேன்.

அரசாங்கம் தற்போது 92 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றில் ரூ. 84.38 , 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றில் ரூ. 71.19 , டீசல் லீற்றர் ஒன்றில், ரூ. 131.55 சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றில் ரூ. 136.31 மற்றும் மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றில் ரூ. 294.50 என நட்டமடைகின்றது. பெற்றோலிய கூட்டுத்தாபனத்தால் இந்த நட்டத்தை மேலும் தாங்கிக் கொள்ள முடியாது. அதேபோல இலங்கை மின்சார சபை மின் அலகு ஒன்றிற்காக உங்களிடம் ரூ. 17ஐ அறவிட்டாலும் அதன் பொருட்டு 48 ரூபாய்கள் வரை செலவு செய்கிறது. அதன்படி ஓர் அலகுக்கு 30 ரூபாய் நட்டம் ஏற்படுகிறது. அதுவும் மோசமான சிக்கலாகும்.

நான் இந்த நேரத்தில் விருப்பப்படாவிட்டாலும் பணத்தை அச்சடிப்பதற்கு அனுமதி வழங்க நேரிடும். அரச ஊழியர்களின் இந்த மாத சம்பளத்தை வழங்கவும், உங்களுக்கு தேவையான பொருட்கள் சேவைகளின் பொருட்டே அதனை செய்யவுள்ளது. எவ்வாறாயினும் பணத்தை அச்சடிப்பதால் ரூபாயின் பெறுமதி குறையும் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். தற்போதைய நிலையில் பெற்றோலிய கூட்டுத்தாபனம் மற்றும் மின்சார சபைக்குத் தேவையான நிதியைக்கூட தேடமுடியாதுள்ளது. எவ்வாறாயினும் எதிர்வரும் சில மாதங்களுக்கு நீங்களும் நானும் வாழ்க்கையில் மோசமான காலகட்டத்தை கடக்க நேரிடும். அதற்கு நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் முகம் கொடுக்க வேண்டும்.

நான் மக்களுக்கு விடயங்களை மறைத்து பொய் சொல்வதற்கு எந்தவகையிலும் விரும்பவில்லை. பயங்கரமாக இருந்தாலும் - அசிங்கமாக இருந்தாலும் இதுதான் உண்மையான நிலைமை. குறுகிய காலத்துக்கு நாம் கடந்த காலத்தைவிட மிகவும் கஷ்டமான காலத்துக்கு முகம் கொடுக்க போகின்றோம். இந்த நேரத்தில் நமக்கு கவலைப்பட மட்டுமே முடியும். ஆனால், இது குறுகிய காலத்துக்கு மட்டுமே. எதிர்வரும் சில மாதங்களில் எமது நட்பு நாடுகளின் உதவிகள் மற்றும் ஒத்துழைப்பு எமக்கு கிடைக்கும். அவர்கள் எமக்கு உதவி செய்வதாக உறுதியளித்துள்ளனர். அதன் பொருட்டு எதிர்வரும் சில மாதங்கள் நாம் பொறுமையுடன் இருக்க வேண்டும். ஆனால், இதில் இருந்து நாம் மீள முடியும். அதன்பொருட்டு நாம் புதிய வழிக்கு செல்ல நேரிடும்.

இந்த சந்தர்ப்பத்தில் தற்போதைய நிலைமை சம்பந்தமாக எதிர்கட்சி தலைவர் உட்பட கட்சித் தலைவர்களுக்கு அனுப்பிய கடிதங்களுக்கு பதிலளித்தமை குறித்து அவர்களுக்கு நன்றி கூறுகிறேன்.

தற்போது நிலவும் இந்த சிக்கல்களுக்கு தீர்வு காணும் பொருட்டு தேசிய சபை அல்லது அரசியல் சபை ஒன்றை அனைத்து கட்சிகளினதும் பங்கேற்புடன் உடனடியாக அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது. இதன் மூலம் அனைத்து தரப்பினருடனும் கலந்தாலோசித்து எட்டப்படும் தீர்மானத்திற்கு அமைய நிச்சயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் பொதுவான குறுகிய கால - மத்தியக் கால - மற்றும் நீண்ட கால செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தி நாட்டை மீண்டும் உயர்ந்த நிலைக்கு இட்டுச் செல்ல எம்மால் முடியும். - என்றார். (ஐ)

## வன்முறைகளால்...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

பத்தரமுல்லை வெவ வீதியில் உள்ள வீடொன்று தாக்கப்பட்டது. அத்துடன், குருநாகல் வில்கொடவில் உள்ள அரசியல் அலுவலகம், மல்கடுவவயில் உள்ள மது பான தொழிற்சாலைக்கு தீ வைக்கப்பட் டன. லக்கலையிலுள்ள பிரதேசத்தில் உள்ள பண்ணையில் இருந்தும் விலங்கு கள் துரத்தப்பட்டன.

இந்த இடங்களுக்கு மேலதிகமாக குருநாகல் மாவத்தகமை, நிக்கவெரட்டிய, மதுரங்குளிய மற்றும் மொரட்டுவ பிர தேசங்களில் உள்ள மதுபான விற்பனை நிலையங்கள் தாக்கப்பட்டுள்ளன.

கல்கிசையில் உள்ள வீடு மற்றும் கொழும்பில் உள்ள ஹோட்டல் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

## எரிவாயு...

வந்தடையவுள்ளது.

மற்றொரு கப்பல் நாளை நாட்டை வந்தடையவுள்ளது. இந்த இரு கப்பல்களுக்குமான கொடுப்பனவாக 70 இலட்சம் அமெரிக்க டொலர்கள் இன்றைய தினம் செலுத்தப்படும்.

இதற்கமைய, நாளை முதல் தினசரி 80 ஆயிரம் எரிவாயு சிலிண்டர்கள் சந்தைக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## ரணிலை...

செலுத்தினோம். அதேவேளை, பிரதமராக ரணில் அல்ல வேறு யார் வந்தாலும் நாம் தொடர்ந்து பணியாற்றியிருப்போம்” என்றும் இந்தியத் தூதுவர் அந்தச் சந்திப்பில் தெரிவித்தார். (அ)

## ரணிலுடன்...

“புதிய அரசு மேற்கொள்ளும் சகல நடவடிக்கைக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரவளிக்கும் என்பது இதன் மூலம் அர்த்தமாகாது. எனினும், மக்களின் நலனுக்காகவும், மக்களின் பிரச்னைகளுக்கு தீர்வு காணவும் அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முழு ஆதரவை வழங்கும்.” எனவும் அவர் குறிப்பிட்டார்.

தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்து ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த காலத்தில் அவருடன் நீண்ட நேரம் கலந்துரையாடியதாகவும் அவருக்கு வடக்கு - கிழக்கு மக்களின் பிரச்னை குறித்து நன்கு தெரியும் என்றும் சம்பந்தன் சுட்டிக்காட்டினார்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பிரச்னைகளுக்கு அதிகாரப் பகிர்வின் மூலம் தீர்வு காண்பது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஊடாக இலகுவானது. பலமான அரசாங்கத்தை கட்டியெழுப்பிய பின்னர் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் அனைத்துப் பிரச்னைகள் தொடர்பில் அவருடன் கலந்துரையாடி தீர்வு காணப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## கோட்டாவை...

முற்றிலும் கண்டிக்கப்படவேண்டியது என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்திய அரசின் எடுபிடிகளாக செயற்படும் தமிழ் அரசியல் கட்சிகள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக செயற்படுகின்றமை, அதேபோல எங்களை தோற்கடிப்பதற்காக தான் ஒரு தேசியவாதி என நடிக்கின்றவர் அமைச்சர் பதவிகளையும் ஏற்பதாக அறிவித்திருக்கின்றார்.

சுமந்திரன் கொஞ்சம் நாசூக்காக அரசாங்கத்துடன் இணையமாட்டோம். ஆனால் தவிசாளர் பதவியை ஏற்பதாக கூறியிருந்தார். ஆனால் அதையும் தாண்டி பெரும் தேசியவாதியான விக்னேஸ்வரன் ஐயா, தான் அமைச்சர் பதவி ஏற்கவும் தயாராக உள்ளதாக கூறியுள்ளார்.

எனவே தமிழ் மக்கள் ஒன்றை விளங்கிக் கொள்ளவேண்டும். எம் மீது இனப்படுகொலைகளை மேற்கொண்ட ராஜபக்ஷ தன்னுடைய ஆட்சியை, தன்னுடைய குடும்ப ஆட்சியை, தன்னுடைய தரப்பை பாதுகாப்பதற்கும் மேற்கிடமும் இந்தியாவிடமும் சரணடைந்து ரணில் விக்கிரமசிங்கவை பிரதமராக நியமித்துள்ளார். அந்த நியமனத்தை வைத்து மேற்கும் இந்தியாவும் விரும்பிய வகையில் தமிழ் மக்களின் வாக்குகளை பெற்ற கட்சிகளும்கூட இனப்படுகொலையாளியின் ஆட்சிக்கு முண்டு கொடுக்கப் போகின்றார்கள் - என்றார். (அ-03)

## ரணிலை விட்டு...

குழு கூடி தீர்மானம் எடுக்கவும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் ஒருங்கிணைப் புக்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் இணைய வழியில் நடைபெற்றது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், பாராளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தன் கருணாகரம், எம்.ஏ.சுமந்திரன், தமிழரசுக் கட்சியின் துணைச் செயலாளர் பா.சத்தியலிங்கம், புளொட் அமைப்பின் ஆர்.இராகவன், ரெலோ அமைப்பின் குருசுவாமி சுரேந்திரன் ஆகியோர் இந்த சந்திப்பில் பங்கேற்றனர்.

ஜனாதிபதிக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தை ஆதரிப்பதென முடிவானது. பிரதமர் ரணில் மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு இப்போதைக்கு சாத்தியமில்லையென்பதால், இந்த விடயத்தில் பின்னர் தீர்மானிப்பதென முடிவானது.

ரணில் புதிய பிரதமராகியுள்ள சூழலில், பொருளாதார நெருக்கடியை கருத்தில் கொண்டு உடனடி எதிர்ப்புக்களை வெளியிடுவதில்லை, எதிர்க்கவேண்டிய விடயங்களை மாத்திரம் எதிர்க்கலாமென்றும் கலந்துரையாடப்பட்டது.

பிரதிசபாநாயகர் தெரிவில் பொதுஜன பெரமுன தரப்பு வேட்பாளரை ஆதரிப்பதில்லையென்றும், அன்றைய தினம் பொருத்தமான வேட்பாளரை எதிர்தரப்பு பரிந்துரைத்தால், பாராளுமன்ற குழு கூடி ஆதரிக்கும் தீர்மானத்தை எடுக்கலாமென்றும் தீர்மானிக்கப்பட்டது. அ)

## 10கட்சி...

இணக்கப்பாட் டுக்கு வந்தனர்.

பிரதமர் அலுவலகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற சந்திப்பின்போதே இவ்வாறு இணக்கப்பாடு எட்டப்பட்டது.

எனினும் புதிய அரசாங்கத்தில் அமைச்சுப் பதவிகளை ஏற்க 10 கட்சிகளும் மறுப்பு தெரிவித்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

ஈழநாடு
Eelanadu

# வன்முறையை தடுக்கவேண்டாமென்று பணிப்புரை விடுத்த பாதுகாப்பு செயலர்!

## விஜித ஹேரத் எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, மே 17

**கொழும்பு அலரிமாளிகையில் இருந்து கொழும்பு கோட்டா கோகமவுக்கு வந்த வன்முறையாளர்களை தடுக்கவேண்டாமென பாதுகாப்புச் செயலாளரே பணிப்புரை விடுத்ததாக தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் கூறுகையில்-

மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருக் கும்போதே, சம்பவம் தொடர் பாக விசாரணை நடத்துவதில் அர்த்தமில்லை. அவரை பதவி நீக்கம் செய்துவிட்டு விசாரணை நடத்த வேண்டும்.

இந்த தாக்குதலுக்கு மூளையாக செயற்பட்டவர்கள் முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உள்ளிட்டோரே.

கோட்டா கோ கமவை தாக்கியவர்களை கைது செய்யும் நோக்கில் அடுத்தடுத்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர் - என்றார். (அ)

# கொழும்பில் தீவிர பாதுகாப்பு

கொழும்பு, மே 17

கொழும்பில் திடீரென நேற்று பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன.

நேற்று இரவு முதல் இன்று காலை 5 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ள நிலையில் கொழும்பில் திடீரென பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டது.

கொழும்பு நகரங்கள் அனைத்திலும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

இன்று பாராளுமன்றம் கூடவுள்ள நிலையில் இவ்வாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ)

# ஊரடங்கு நேரத்தில் மாற்றம்

கொழும்பு, மே 17

நேற்று இரவு ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட நேரத்தில் திடீர் மாற்றம் செய்யப்பட்டது.

நேற்று இரவு 8.00 மணி முதல் ஊரடங்குச் சட்டம் அமுலாகும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் அது பின்னர் இரவு 11.00 மணி தொடக்கம் என மாற்றப்பட்டது.

அதனடிப்படையில் நேற்று இரவு 11.00 மணிமுதல் இன்று அதிகாலை 5 மணி வரை ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (அ)

# 318 மது வகைகள் வெசாக் நாளில் சாவகச்சேரியில்கைப்பற்றப்பட்டன!

வடமராட்சி, மே 16

வெசாக் விடுமுறை தினத்தில் விற்பனை நோக்கில் பதுக்கி வைக் கப்பட்டிருந்த மதுபானப் போத்தல் கள் மற்றும் பியர் ரின்களை சாவ கச்சேரி மதுவரித் திணைக்களத்தி னர் நேற்று முன் தினம் ஞாயிற்றுக் கிழமை காலை மீட்டுள்ளனர்.

உதவி மதுவரி ஆணையா ளர் ரொஷான் பெரேராவின் ஆலோசனைக்கு அமைவாக, சாவகச்சேரி மதுவரிப் பொறுப் பதிகாரி ஆ.ராஜ்மோகனின் வழிநடத்தலில், மதுவரி சார் ஜன்ட் மேஜர் மகேஸ்வரன் தலைமையிலான குழுவினர் கைதடிப் பகுதியில் உள்ள வீடொன்றில் பதுக்கி வைக்கப் பட்டிருந்த மதுபானப் போத்தல்களை மீட்டிருந்தனர்.

இதன்போது 180மில்லி லீற்றர் கொள்ளளவுடைய 150 சாராயப் போத்தல்கள், 500 மில்லிலீற்றர் கொள்ளளவுடைய 168பியர் ரின்கள் ஆகியன மீட்கப்பட்டதுடன்-சந்தேக நபர் ஒருவரும் கைது செய்யப் பட்டுள்ளார்.

கைதான சந்தேக நபர் நீதிமன் றில் முற்படுத்தப்பட்டு பிணை யில் விடுவிக்கப்பட்ட நிலையில் எதிர் வரும் வெள்ளிக்கிழமை நீதிமன்றில் ஆஜராகுமாறு உத் தரவிடப்பட்டுள்ளமை குறிப் பிடத்தக்கது. (அ-02)

# முள்ளிவாய்க்கால் ஊர்தி மன்னாரை வந்தடைந்தது

மன்னார், மே 17

தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஏற்பாடு செய்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் ஊர்தி பவனி நேற்று திங்கட்கிழமை மன்னாரை வந்தடைந்தது.

கடந்த 12 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வாரம் ஆரம்பமானது. இதன்போது வடக்கில் உள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் குறித்த நினைவேந்தல் ஊர்தி சென்று முள்ளிவாய்க்கால் வாரம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில் முள்ளிவாய்க்கால் வாரத்தின் 5 ஆவது நாளான நேற்று குறித்த ஊர்தி மன்னாரை வந்தடைந்தது.

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் அஞ்சலி இடம் பெற்றது. தமிழினப் படுகொலைக்கு நீதி கோரி இடம் பெற்ற ஊர்திப்பவனியில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பிரதி நிதிகள் மற்றும் மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது முள்ளிவாய்க்காலில் உயிர் நீத்த மக்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கலந்து கொண்டவர்களுக்கு முள்ளிவாய்க்கால் கஞ்சி வழங்கப்பட்டது. (ஐ)

# ரணில் தோல்வி அடைந்தால் முழு இலங்கைக்கும் தோல்வி

## மத்திய வங்கி முன்னாள் பிரதி ஆளுநர் கூறுகிறார்

கொழும்பு, மே 17

ரணில் விக்ரமசிங்க தோல்வியடைந்தால் முழு இலங்கையும் தோல்வியடையும் என இலங்கை மத்திய வங்கியின் முன்னாள் பிரதி ஆளுநர் கலாநிதி டபிள்யூ. ஏ. விஜயவர்த்தன தெரிவித்தார்.

மேலும், இந்த தோல்வி அடுத்த சில ஆண்டுகளுக்கான தோல்வியாகயிராது. மாறாக ஒரு தேசமாக இலங்கையின் இருத்தலுக்கான தோல்வியாக இது காணப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்-

நம்பிக்கைகள் பலனளிக்காது ஏனென்றால் நம்பிக்கைகள் மனதின் கற்பனையே.

இலக்குகளை அடைவதற்காக நாங்கள் பணியாற்றவேண்டும், பாடுபடவேண்டும்.

இதன் காரணமாக அமைப்பு முறையில் உண்மையான மாற்றத்திற்கான போராட்டங்கள், கிளர்ச்சிகள் தொடரவேண்டும்.

தங்கள் நடவடிக்கைகளுக்கு பொறுப்புக் கூறக்கூடியவர்களால் ஆளப்படும் ஊழல் அற்ற சமூகத்தையே இவர்கள் கோரி நிற்கின்றனர்.

இதனை நிர்வாக அமைப்புக்கு வெளியே இருந்து நடைமுறைப்படுத்தவேண்டும். சட்டபூர்வமாக ஆணை வழங்கப்பட்ட ஆட்சி முறைமையுடன்.

மக்களுக்கு நன்மையளிக்கக்கூடிய அனைவரையும் உள்ளடக்கிய ஸ்தாபனங்களை உருவாக்கவேண்டும், மக்களின் செல்வத்தை கொள்ளையடிக்கும் நிறுவனங்களை நிறுவுவதற்கான சாத்தியத்தை நீக்கவேண்டும்,ஆட்சியாளர்களின் அதிகார துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான உரிய ஏற்பாடுகளை முன்வைக்கவேண்டும்.

இது ரணில் விக்ரமசிங்கவின் இடைக்கால அரசாங்கத்திற்கான பணிகள்.

ரணில் தோல்வியடைந்தால் இலங்கையும் தோல்வியடையும்- என்றார். (அ)

# தமிழ்த் தேச மக்கள் விடுதலை பெற எம்மை அர்ப்பணிப்போம் வாருங்கள்!

## தமிழ் அரசுக் கட்சி தலைவர் அழைப்பு

யாழ்ப்பாணம், மே 17

அழிக்கப்பட்ட தமழ்த் தேச மக்களை நாமெல்லாம் நினைவு கூர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவிடத்திலும், பொருத்தமான தங்களிடங்களிலும் ஒன்று கூடி அஞ்சலி செய்து அந்த மக்கள் ஆத்ம சாந்திக்காகவும் தமிழ்த் தேசமக்கள் விடுதலை பெறுவதற்காகவும் எம்மை அர்ப்பணிக்கிறோம் என்று பிரகடனம் செய்ய வருமாறு தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை ஒட்டி அவர் விடுத்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு சுட்டிக்காட்டினார்.

மேலும், இலங்கையில் தமிழர் தேசமக்கள் வரலாற்றில் தமிழின மக்கள் அழிக்கப்பட்டு வருகிறார்கள் என்பதன் உச்ச காலகட்டமாக 2009 மே திங்களும் முள்ளிவாய்க்கால் நிகழ்ச்சிகளும் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது.

உலகில் பல நாடுகளும், இன மக்களும் தங்கள் விடுதலைப் போராட்ட வரலாறுகளில் ஒரு நாளை முக்கியமாக அடையாளப் படுத்தி விடுதலை பெறும்வரை ஆண்டு தோறும் அந் நாளில் ஒன்று கூடி "விடுதலை பெறுவோம்" எனச் சத்தியப் பிரகடனம் செய்து வந்துள்ளனர் அந்த இலட்சியத்தை அடைந்தும் உள்ளனர்.

அவ்வாறே இலங்கையில் தமிழ்த் தேச மக்களும் "மே" திங்கள் 18ஆம் நாளை அடையாளப்படுத்தி இன அழிவுகளை நினைவு கூர்ந்தும் "விடுதலை பெறுவோம்" என்றும் பிரகடனம் செய்து செயல்பட்டு வருகின்றனர். இலங்கையில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் அரசு வைத்து ஆண்ட தமிழ் மக்கள் ஐரோப்பியரிடம் போரில் இழந்த சுதந்திரத்தைப் பெறுவதற்காகப் போராடி வருகின்றனர் என்பது வரலாறு.

முள்ளிவாய்க்கால் நினைவு தினம் ஆண்டு தோறும் கடைப்பிடிப்பது இலங்கையிலும் இனப்படுகொலை நடைபெற்றது என்பதை நிரூபிப்பதற்காகவேதான். இவ்வாறான இனப் படுகொலை சம்பவங்கள், அவற்றை பிரதிபலித்து நிற்கும் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்ச்சிகள் இலங்கையில் இனப் பிரச்னை தீர்வு ஒன்றை எட்டுவதற்கு பலமானதாக இருக்கும் என நம்புகிறோம்.

எனவே 2022 "மே" திங்கள் 18 அன்று வரை அழிக்கப்பட்ட தமழ்த் தேச மக்களை நாமெல்லாம் நினைவு கூர்ந்து முள்ளிவாய்க்கால் நினைவிடத்திலும், பொருத்தமான தங்களிடங்களிலும் ஒன்று கூடி அஞ்சலி செய்து அந்த மக்கள் ஆத்ம சாந்திக்காகவும் தமிழ்த் தேச மக்கள் விடுதலை பெறுவதற்காகவும் எம்மை அர்ப்பணிக்கிறோம் என்று பிரகடனம் செய்ய வாருங்கள் என்று அழைப்பு விடுக்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.05.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்

6.30 மணி : வணக்கம் டான்



06.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்

07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்

7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்



7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்

8.30 மணி : காலை செய்திகள்

9.00 மணி : கலாட்டா காலை-நேரலை

10.30 மணி : தொடர் நாடகம்

11.00 மணி : சொற்சமர்-மறுஒளிபரப்பு

12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை

**பகல்**

1.00 மணி : மழலைகள் நேரம் ( மறு ஒளிபரப்பு )

1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - மாஸ்,மகாமுனி திரைப்படக் காட்சிகள்

4.30 மணி : குட்டீஸ் தர்பார் - சிறுவர்களை மகிழ்வூட்டும் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்

6.00 மணி : சினிமா சினிமா

6.30 மணி : மூவி டோக்கீஸ்-வேற்று மொழி திரைப்படங்களின் விமர்சனம்

**இரவு**

7.00 மணி : கதை நேரம் - நகைச்சுவை நிகழ்ச்சி



8.00 மணி : இரவுச் செய்திகள்

9.00 மணி : சங்கப்பலகை - இலக்கிய நிகழ்ச்சி

10.00 மணி : BLACK AND WHITE

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி

8.00 மணி : சிரிப்பு சரடிவெடி

10.00 மணி : ஒரு பட கொமடி

11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்

3.00 மணி : குண்டக்க மண்டக்க

5.00 மணி : ஒரு பட கொமடி

6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி

9.00 மணி : சிரிப்போ சிரிப்பு

10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்

7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்

8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்

9.00 மணி : மெல்லிசை

10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி

1.00 மணி : விசை இசை

3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)

4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)

5.00 மணி : இனிது இனிது

6.00 மணி : என்றென்றும் இசை

7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்

9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

6.00 மணி : தரம் 07 - தமிழ்

6.45 மணி : தரம் 08 - தமிழ்

7.30 மணி : தரம் 09 - கணிதம்

8.15 மணி : தரம் 10 - கணிதம்

9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்

10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி

11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்

1.00 மணி : தரம் 07 - தமிழ்

2.00 மணி : தரம் 08 - தமிழ்

3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்

3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்

5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்

5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்

6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ரிவி

**காலை**

5.00மணி : சிவாய மந்திரம்

6.00 மணி : சுப்ரபாதம்

6.30 மணி : சுப்ரபாதம்

7.00 மணி : இன்றைய சிந்தனை

7.05 மணி : இன்றைய நாள்

7.20 மணி : ஈழத்து சித்தர்கள்

7.30 மணி : மங்கள இசை

8.00 மணி : அருளுரை

8.30 மணி : திருவாசகம்

9.00 மணி : திருவிழா-01

10.00 மணி : பஜனை

10.30 மணி : தமிழககோவில் திருவிழா

11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி

12.30 மணி : திருவிழா-02

6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்

7.30 மணி : அருளுரை

8.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை

7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்

8.00 மணி : ஜெபமாலை

9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)

10.00 மணி: அன்னை மரியா

10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)

01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)

02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)

03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)

04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)

05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)

06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

07.00 மணி : ஞானவழி

07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்

7.00 மணி : இறை சிந்தனை

7.30 மணி : இஸ்லாமிய பாடல்

8.00 மணி : கலந்துரையாடல்

9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்

10.00 மணி : மனதோடு பேசலாம்

10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்

11.00 மணி : சுவனப்பாதை

11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்

12.30 மணி : இஸ்லாமிய வரலாறு

1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்

2.00 மணி : கஸீதா

2.30 மணி : இறை சிந்தனை

3.00 மணி : பாடல்கள்

3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்

4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்

5.00 மணி : இறை தென்றல்

6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்

8.00 மணி : இஸ்லாமிய வரலாறு